KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ ஜனவரி ௴ 22௳ [No. 3

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 41
2. அப்பர் (வைத்தியம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 43
3. சூளாமணி (நாட்டுச் சருக்கம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 45
4. யாப்பிலக்கணம் (அசை) 47
5. மானத சாத்திரம் (உணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 50
6. ஞானமொழிகள்—க. வேலுப்பிள்ளை 52
7. தனிப்பாடல் (நாமகள்)
நவாலி க. சோமசுந்தரம்பிள்ளை 53
8. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 53
9. வர்த்தமானம் 59

கலாநிலயம்

வாழ்வாங்கு வாழ்பவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் யாவர், என்னும் ஐயத்தால் நையாதார் இலராகார். அறம் பொருளின்பமெனு மிம் மூன்றினையும் பிறர் பழிப்பதில்லாவகையில் புரிந்தீட்டித் துய்க்கின்ற நீர்மையோடு முழுகுகின்ற விழுமியோர் தாமே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவராவர் எனமொழிவதிற் பிழையிலதேனும், வாழ்க்கையின் முழுமையினைக் குறிப்பதற்கேற்றதோர் மாற்றம் அஃதெனக் கொள்ளல் அருமை. நம் நந்தனார் அறமொன்றும் ஆற்றியதாக அறிகிலோம்; பொருளொன்றும் ஈட்டியதாகத் தெரிகிலோம்; இன்பம் யாதுந் திளைத்ததாகக் கண்டிலோம். ஆயினும், தேனினும் பாலினு மினியவத் திருநாளைப் போவார் சரிதத்தைக் கேட்குந்தோறும் கேட்குந்தோறும், செவ்விய முழுமையில் முழுகிய வாழ்க்கையர் அவரெனும் ஓர் உணர்வு நம்மனோர் உள்ளத்தில் திரண்டெழுகின்றது. “இவ்வுணர்வு எதன்பாற் பிறந்து எங்ஙனம் பெருகி எவ்வயின் சேர்கின்றதென வகைபட இயம்பல் இயல்வதன்று. உள்ளத்தின் செய்திக்கெல்லாம் இவ்வியலாமை ஒக்கும். எனினும் சிந்தனை சிறிது செலுத்திச் சோதித்தால் இன்னவைகளை ஒருவாறு தேர்ந்துகொள்ளக் கூடுமென நினைக்கின்றோம்.

இவ்வாராய்ச்சியின் பொருட்டு இன்பத்தை இருவிதப் படுத்தலாம். சிற்றின்பம் பேரின்பம் என்னும் பாகுபாடு புதியதன்றெனினும் அதனையே வேறோர் வகையில் இங்குக் கூறவேண்டி யிருக்கின்றது. ஒன்றினை நாடிச் சென்று அதனை அடைந்து தன்னுடைமையாக்கி அவ்வுடைமை யுரிமையைக் கையாண்டு கொண்டாடுகின்ற தன்மையில் மனத்தின்கண் தோன்றுகின்ற ஒருவித எழுச்சியை இன்பமென்னும் சொல்லால் குறிக்கின்றார் பெரும்பாலோர். ஆசை நிறம்புங்கால் அவ்வப்போது தோன்றி மறைகின்ற மகிழ்ச்சியுடன் இவ்வின்பம் எனும் கருத்தை மயங்கலாகாது. பட்டாடை உடுக்கவேண்டுமென்று நெடிது நாள் விழைந்திருந்த ஒருவனுக்கு அது எய்தியதும் உண்டாகின்ற உள்ளக்கிளர்ச்சி மகிழ்ச்சியாகலாம். அப்பட்டினாற்றன்னை புனைந்து கொண்டு கண்ணாடி நோக்கி நிற்கின்ற காலத்தில், பட்டினைப் புனையுமுன் தன் வடிவம் இருந்தவாறும் புனைந்தபின் அது தோன்றுமாறும் சீர்தூக்கி, முன்னதில் இப்பின்னது சிறந்ததாயிற்றென எண்ணுவானாகி, அதனால் இனித் தான் பிறரால் எவ்வண்ணம் மதிக்கப்பெறுவான் என்பதை உலக இயலிற்கிணங்க ஓர்கின்ற காலத்தில் பல்வேறு எண்ணங்கள் அவனது நினைவினை உழக்குதல் இயற்கை. “யாவரும் என்னை இனிவருகவென அழைப்பாரன்றோ” என்று களிக்கின்றான். பட்டுடை இல்லாத் தன்னயலகத்தான் அஃதுடைய தன்னைக்கண்டுகண்டு இனிக் கருத்தழிவானன்றோ எனச் செருக்குகின்றான். இப்படியே எண்ணங்கள் எத்தனையோ பல. இத்தகைய எண்ணங்களின் தொகுதியே மகிழ்ச்சியெனும் பெயரிற்கிலக்காய் முடிகின்றது. மற்று, இஃதனைய மகிழ்ச்சியின் இடையறாத் தொடர்ச்சியால் இயன்றதெனினும் அவ்வாழ்க்கை முழுமையுற்றுத் திகழ்கின்றதென்னற் கொண்ணுமோ! குறைகளும்

பலபல கூடிக் கூடிக் குலவா தொழியா தென்பது திண்ணம்.

மகிழ்ச்சியினும் ஓரளவு உயர்ந்ததோர் உள்ளத்தியக்கத்தினை உவகை எனுஞ் சொல்லால் குறிக்கலாம். (இதற்கிதுவே பொருள் எனும்படி வரையறுக்கப்பெற்று இச்சொற்கள் பயின்று வருகின்ற வழக்கு இல்லையாயினும் இங்கு இக்கட்டுரையின் கருத்துத் தெளிவதன்பொருட்டுச்சிறப்பாக ஒவ்வோர் பொருளுடன் அச்சொற்களைச் சார்த்திப் பயில்கின்றோம்). பெரிது நாள் மகவின்றி வருந்திய ஒருவன் அப்பேற்றினை எய்தியவுடன் மொய்த்தெழுந்து அவனுள்ளத்தில் கிளர்கின்ற எண்ணங்கள் உவகைக்கிடனாகின்றன. இவ்வெண்ணங்களின் தன்மையை ஆய்வது எளியதன்றெனினும், பட்டாடையுடுத்தி மகிழ்கின்றவனது எண்ணங்கள் போலல்லாது இவனது எண்ணங்கள் வேறுவகையாவது ஒருவாறு புலப்படும். அந்தத்தில் எல்லாம் ஒன்றுபோல் தோன்றுமேனும், முதற்பார்வைக்கு, மகிழ்ச்சியென்பது தன்னைப்பற்றியும் உவகையென்பது தான்எய்திய பொருளைப்பற்றியும் எழுகின்றன வென்னும் வாசகத்தால் ஒருவண்ணம் வேறுபடுத்தலாம். உவகையோடு மகிழ்ச்சியும் மகிழ்ச்சியோடு உவகையும் ஒவ்வோரளவு கலந்தே பயில்வது இயற்கையாதலால், உவகைக் கிடையே பொருளைப்பற்றிய எண்ணங்களும் கலப்பதுகண்டு நம்முடைய பாகுபாடு பொருந்துமோவென மயங்க வேண்டா. சில நிலைகளை மகிழ்ச்சியென்றும், சில நிலைகளை உவகையென்றும் சிறப்புப்பற்றிக் கொள்ள வேண்டுமேயல்லாது தனித்தனி பிரித்துக் கொள்ளல் அரிதினும் அரியதாகும். ஆதலின், உவகையென்பது பொருளைப்பற்றி எழுவதென்றும் மகிழச்சி யென்பது தன்னைப்பற்றி எழுவதென்றும் வைத்துக்கொள்வோம். இனி உவகை வேறு இன்பம் வேறு. "ஈத்துவக்கும் இன்பம்" என்ற வள்ளுவர் வாசகம் இவ்வேற்றுமையை உட்கொண்டிருக்கிறது. "ஈத்துவக்கும் உவகை" என்னாது "ஈத்துவக்கும் இன்பம்" என்றதே இதற்குச் சான்று. தன்னைப்பற்றியது மகிழ்ச்சியெனவும் பொருளைப்பற்றியது உவகையெனவும் சிறப்புப்பற்றிக் கூறியவாங்கே, தன்னையேனும் பொருளையேனுந் தொடராமல் இரு நிலையினைப்பற்றி எழுகின்ற உள்ளத்தியக்கத்தினை இன்பம் என்று கூறலாம். ஒருபொருளும், அப்பொருளோடு தன்னைத் தொடர்புபடுத்திக்கொள்கின்ற ஒருவனும் இருக்கவேண்டியது இன்றியமையாததேனும், தானும் பொருளும் தொடர்பும் பின்கழிய, எஞ்சியதோர் நிலையின் பயனை இன்பம் எனப்பகரலாம். "இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு" என்னுங் குறளில் இன்பம் ஒரு பயனாகும் பான்மை புலப்படுகின்றது. "அவாவென்னுந் துன்பத்துட் டுன்பங் கெடின் இன்பம் இடையறாது ஈண்டும்" என்றவிடத்தும் இப்பயனிலையின் பண்பினை உணரலாம். "இறந்த வெகுளியிற்றீதே சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு," என்ற குறளில், நாயனார் உவகையையும் மகிழ்ச்சியையுங் கலந்து கூறினார். முன் எடுத்துக்காட்டிய "ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடமை வைத்திழக்கும் வன்கணவர்" என்னுங்குறளில் உவகையும் இன்பமுங் கலந்துவந்திருக்கின்றன.

மாழ்குதலின்றியே மகிழ்ந்தனராய், வெறுப்பது இன்றியே உவந்தனராய், துன்பமின்றியே இன்புற்றனராய்த் தாம்தாம்வாழவேண்டும் என்னும் நோக்கம்எல்லாருடைய எண்ணத்தையும் இயக்குகின்றது. தாம்மாத்திரமன்றி மாந்தரனைவரும் அவ்வாறே வாழவேண்டுமெனும் நோக்கமும் நோக்கத்திற்கேற்ற முயற்சியும் உடையவர்களும் உளர். நோக்கமும் முயற்சியும் இவையாக இதற்கு மாறான செய்தியே பெரும்பாலும் எங்கும் நிகழ்கின்ற விபரிதங்களையுங் காண்கின்றோம். இது என்னைகொல், என வியக்கும் வகையும் அறியாதார்க்கு யாம் புகலவல்லது ஒன்றுமில்லை. மற்று, வியந்து விபந்து வருந்துவார் சிலர்க்கு ஓரளவு உதவியாய் எய்தும் பொருட்டு மகிழ்ச்சி உவகை இன்பம் என்னும் இவைகளின் தன்மைகளைச்சற்று ஆராய்வோம். அவ்வாறு ஆராயுங்கால், மனிதரிற் பெரும்பகுதியோர் அவைகளைச்சார்ந்த உண்மையினை அறியாமையாலே, அவை அல்லாதனவற்றை ஆமென மயங்கியும், ஆவனவற்றை ஆகாவென விலக்கியும், இவைகளை எய்திவிட்டால் இம்மைக்குரியயாவும் வாழ்க்கையில் கைவரப்பெற்றதாகும் என மதித்தும் விவகரிப்பவராகின்றனர் என்பதுபுலப்படும். மருண்ட தன்மையிதனின்று நீங்க மேலோர் சிலர் புகன்றுள மெய்யுரைகள் நமக்குக் கைதந்து நனியுதவும். அத்தகைய உரைகளின் உண்மையினை ஓர்தற்கு மகிழ்ச்சி உவகை இன்பம் என்னுமிவைகளின் தன்மைகளை முன்னர் ஆராய்ந்து கொள்ளல் இன்றியமையாததாகின்றது. முன்னுரைத்தபடி இவை மூன்றும் ஒவ்வோரளவு ஒன்றினோடொன்று உறழ்கின்ற காரணத்தால் அவைகளுக்குள்ள வேறுபாட்டின் சிறப்பைத் தெளிந்து கொள்ளல் எளியதன்று. ஆயினும் ஆர அமர்ந்து நோக்குவார்க்கு இவைகளின் இலக்கணம் தனித்தனி தோன்றாமற்போகாது என்பதுந்திண்ணம். நெடிதுநாள் மணவினைநேராது ஏங்கிய ஒருவனுக்கு மனைவி யென்றொருத்தி வந்தெய்தினால் அவன் அங்ஙனமே அடைவது மகிழ்ச்சி. அம்மனைவியும் அறிவு அழகு முதலியவைகளால் விளங்கக் காணுங்கால் அவனடைவது உவகை. அன்னவளோடு அவனது இல்லறம் நல்வகையில் செல்லும் அமைதியில் சேர்வது இன்பம். முதலில் தனக்கு மனைவி யென்றொருத்தி நேர்ந்தாளே என்னுமெண்ணம் தலை சிறப்பதால் தன்னைப்பற்றி எழுகின்ற அக்கிளர்ச்சியை மகிழ்ச்சியென்றுரைப்போம். ஆயினும், வாய்த்தது மனைவி என்று நினைக்கும்போது மனைவியெனும் அப்பொருளும் இம்மகிழ்ச்சிக்கு ஆதாரமாகின்றது. அம்மனைவி அழகும் குணமும் உடையவளாய் இருப்பது நோக்க எய்தும் உவகை அப்பொருளின் தன்மையால் விளைகின்றதாதலின், உவகை பொருள் பற்றி எழுகின்றது என்றுரைப்போம். ஆயினும் அத்தகைய மனைவி தனக்கு வாய்த்த நினைவும் அதனிற் கலந்திருப்பது இயல்பே. அத்தகைய மனைவியைத்தான் எய்தியதால் விளையும் பயன் இன்பம். எனினும், தன்னுடைய பேறும் மனைவியின் தன்மையும் இவ்வின்ப உணர்ச்சிக்கு ஆதாரமாகின்றன. ஆனபோதிலும், தன்னையேனும் பற்றி நிகழ்கின்றதிவ்வின்பம் என்னலாகாது.

அறிக்கை:—

புதுவருட சந்தாப் பணத்தை வி. பி-க்குக் காத்திராது மணியார்டர் மூலம் அனுப்பி வைக்குமாறு நேயர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். புதிய ஆண்டு முதல் வி. பி. களை மூன்று நாட்களுக்கு மேல் தபால் நிலயத்தார் வைத்துக்கொள்ள மாட்டார்களாதலால், மணியார்டர் மூலம் சந்தாவைச் செலுத்துவது எமக்கு மிகவும் உதவியாக விருக்கும். வி. பி. அனுப்ப நேருங்கால், தாமதம் செய்யாது பணம் கட்டிப் பத்திரிகையை ஏற்றுக்கொள்ளும்படி நேயர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

அப்பர்

அப்பரும் அறுபத்தினுன்கு கலைகளும்.

16. வைத்தியம்.

[25-வது பக்கத் தொடர்ச்சி]

பிணி தீர்க்கு முறைகள்

II தந்திரம்:—நோய்களை பொழிப்பதற்குப் பல வகைத் தந்திரங்களுள. மந்திரத்துடன் * தந்திரமும் அறியவேண்டும். சைவத் தந்திரங்களில் முறைப்படி செய்யப்பட்ட திருநீற்றை அணிவித்தல் ஒன்று. இதுவே பாண்டியன் வெப்புநோயைத் தீர்க்கப் புகலி வேந்தர் அவன்தேகமுற்றிலும் இட்டதாகும். இதைத் திருநீற்றுப்பதிகத்தின் முதற்பாசுரத்திலே ஒருவாறு குறிப்பிட்டனர் :—

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் றிருநீறே
திருஞான சம்பந்தர்.

திருநீற்றுப்பொடி யணிவது சுகாதாரத்திற்கும் இன்றியமையாததாம். தேக சுகாதாரங்களே நோய்க் கிடங்கொடாதிருப்பதற்கு மேலானதந்திரங்களாகும்.

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பா யென்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றும்
துடியனைய விடைமடவாள் பங்கா வென்றும்
சுடலைதனி னடமாடுஞ் சோதி யென்றுங்
கடிமலர்தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.
திருக்கன்றாப்பூர் - திருத்தாண்டகம் 2.

வெண்ணீறும் அநுஷ்டானமும் சுத்தமாய் வெளுத்த உடையும் நோயைப் போக்குந் தந்திரங்களிற் சேர்ந்தனவேயாம். இவையன்றியும் சிவபூசைக்கு நறுமலர் கொய்தலும் வில்வம்முதலிய பத்திரங்களைச் சேகரித்தலும் சுகாதாரச் செய்கைகளே:—

நறுமலர் நீருங் கொண்டு
நாடொறு மேத்தி வாழ்த்திச்
செறிவன சித்தம் வைத்துத்
திருவடி சேரும் வண்ணம்
மறிகடல் வண்ணன் பாகா !
மாமறை யங்க மாறு
மறிவனே யால வாயி
லப்பனே ! யருள்செய் யாயே
திருவாலவாய் - திருநேரிசை 8.

தூபதீபத்திற்கு ஏற்பட்ட குங்கிலியம்,சாம்பிராணி கற்பூரம் முதலியன தேகத்திலுள்ள பிணியை நீக்கக் கூடியன. அங்கு தரிசனமான காலையிலேயே பிணியனுக்கு யாதொரு சிகிச்சையும் தேவையில்லை. ஏனெனில் இவ்வாசனைப் பொருள்கள் சதா நிறைந்த திருக்கோயிலே வயித்தியசாலைபோல் அன்னுன் துன்பத்தை நிவர்த்திக்கும்:—

தொடுத்த மலரொடு தூபமுஞ்
சாந்துங்கொண் டெப்பொழுது
மடுத்து வணங்கு மயனொடு
மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன்
னாகிய தில்லைசிற் றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே?
கோயில் திருவிருத்தம் - 3.

தேனுடைய மலர்கள் கொண்டு திருந்தடி பொருந்தச்சாத்தி
யானிடை யஞ்சங் கொண்டு வன்பினு லமரவாட்டி
வானிடை மதியஞ் சூடும் வலம்புரத் தடிகடம்மை
நானடைந் தேத்தப்பெற்று நல்வினைப் பயனுற்றேனே
திருவலம்புரம் - திருநேரிசை 3.

சிவனடியார்கள் உருத்திராட்ச மணிவதும் சுகாதாரக் கருவி யென்னலாம் "அக்கு" என்று நமது திருமுறைகளிற் காணப்படும் இம்மணியானது நேபாள தேசத்தில் விளையும் ஒருவகைத் தெய்வீக விருட்சத்தின் வித்தாகும். இதைச் சிறந்த மருந்தென்றும் நமது வைத்திய சாஸ்திரிகள் கூறுவர். எல்லா மருந்தும் கைவிட்டபிறகு உணர்வழிந்த நோயாளிக்கு இதைத் தேனில் இழைத்துக் "கெண்டாவிழ்தம்" எனக் கொடுப்பதுண்டு. இது நல்வினைப்பயனால் உள்ளே செல்லுமானல் பிராணனுக்கு வந்த விபத்து தீருமென்பது மேலோர்துணிபு. இதனால் இமயமலைச் சாரலில் * விளையும் இப்பொருளை ஏராளமாய்க் கொண்டுவந்து இந்தியாமுழுவதும் வழங்குவர். இதையணிவது புருடர்களுக்கு அழகை யுண்டுபண்ணும். சிவபெருமானுக்கே † அக்கினரம் அழகு தருவதாயின் நம்மனோர்க்குச் சொல்லவும் வேண்டுமோ!

---

* மந்திரத்திற்கும் தந்திரத்திற்கு முள்ள தன்மைகளை அப்பர் சீர்தூக்குவது காண்க:—

"இந்திரன் பிரமனங்கி யெண்வகை வசுக்க ளோடு
மந்திர மறைய தோதி வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திர மறியாத் தக்கன் வேள்வியைத் தகர்த்த ஞான்று
சந்திரற் கருள்செய் தாருஞ் சாய்க்காடு மேவி னாரே"
திருச்சாய்க்காடு- திருநேரிசை 5.

* அக்கிருந்த வரையானை யம்மான் றன்னை
யவுணர்புர மொருநொடியி லெரிசெய் தானைக்
கொக்கிருந்த மகுடத்தெங் கூத்தன் றன்னை
குண்டலஞ்சேர் காதானைக் குழைவார் சிந்தை
புக்கிருந்து போகாத புனிதன் றன்னைப்
புண்ணியனை யெண்ணருஞ்சீர் போக மெல்லாம்
தக்கிருந்த தலையாலங் காடன் றன்னைச்
சாராதே சாலநாட் போக்கி னேனே
திருத்தாயாலங்காடு - திருத்தாண்டகம் - 2.

† அக்கு மாமையும் பூண்டன லேந்தியில்
புக்குப் பல்பலி தேரும் புராணனை
நக்கு நீர்க ணரகம் புகேன்மினோ
தோக்க வானவ ராற்றெழு வானையே
சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 14.

கொக்கின் றாவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலு நரையூர் நம்பனுக்கு
அக்கி னாரமும் அம்ம வழகிதே!
திருநாரையூர் - திருக்குறுந்தொகை 4.

தக்கனது பெருவேள்வி தகர்த்தா னாகித்
தாமரையா னான்முகனுந் தானே யாகி
மிக்கதொரு தீவளிநீ ராகா சமாய்
மேலுலகுக் கப்பாலா யிப்பா லாகி
யக்கினோடு முத்தினையு மணிந்து தொண்டர்க்
கங்கங்கே யறுசமைய மாகி நின்ற
திக்கினையென் றிருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்த வாறே
திருமுதுகுன்றம் - திருத்தாண்டகம் 5.

நல்ல பண்களின் இசை மற்றுமொரு தந்திரமாம். தேவாரப் பதிகங்களைத் திருப்பண்களில் பாடும்போது அவற்றின்இசை செவியிற்புக, நரம்புகளின் இயக்கத்தால் பிணிதீரலும் தேகம் சுகமடைவதும் பெரும்பான்மை ஆங்கிலவைத்தியர்களாலும் ஆமோதிக்கப்படுகின்றன. இதை அப்பரும்,

விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கு மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
யண்ண லாரடி யேதொழு துய்ம்மினே. (2)

நாளு நம்முடை நாள்கள றிந்திலோம்
ஆளு நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பிட் டிருந்துநீ ரையாதே
கோளி லியான் பாதமே கூறுமே. (3)

விழவி னோசை யொலியறாத் தண்பொழில்
பழகி னார்வினை தீர்க்கும் பழம்பதி
யழல்கை யானம ருந்திருக் கோளிலி
குழக னார்திருப் பாதமே கூறுமே. (4)
திருக்கோளிலி - திருக்குறுந்தொகை.

என்றும், மற்றோரிடத்தில் சிவபெருமானைத் துதிக்குங் காலை

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே. (5)

பண்ணி னின்மொழி கேட்கும் பரமனை
வண்ண நன்மல ரான்பல தேவருங்
கண்ண னும்மறி யான்கடம் பந்துறை
நண்ண நம்வினை யாயின நாசமே. (6)
திருக்கடம் பந்துறை - திருக்குறுந்தொகை.

பிணிதீர்க்கு முறைகள்

III. மருந்து:—திருநாவுக்கரசுநாயனார் பக்தியில் மூழ்கியவராய்ச் சிவபெருமானே எல்லாப் பிணிகளையுந்தீர்க்கும் மருந் *தெனக்கொண்டிருந்த போதிலும் இவர் பாசுரங்களிற் பல, அப்பர் சித்தவைத்தியத்திற் சிறந்தவரென அநுமானிக்கத் தக்கனவாயிருக்கின்றன. மருந்து சுத்தி ஸ்புடம் முதலியனவற்றிற்குச் சில பாசுரங்கள் சிலேடைபோல் காணப்படுகின்றன. இவற்றை ஆராயப் புகுவதன் முன்னர் நமது சித்த வைத்திய † மருத்துவ நிலைமைச்சற்று காண்போமாக.

மருந்துகள் இருவகையன. ஸ்தாவரப் பொருள்களினிடத்திற் கிடைப்பன ஒருவகை மருந்து. ஜங்கமப் பொருள்களிடம் கிடைப்பன மற்றொன்று. இவற்றுள் பெரும்பாலும் வைத்தியத்தில் அதிகமாய்ப் பயன்படுவன ஸ்தாவரப்பொருள்களிடத்துக் கிடைப்பனவேயாம். ஜங்கமப் பொருள்களிடத்துக் கிடைக்கும் மான்மதம், கோரோசனை முதலியன சிறந்த மருந்துகளாயினும் அவை இலவசத்தில் யாவருக்கும் கிடைக்காது. இக்காலத்தைப்போல் அப்பர் காலத்தில் வைத்தியசாலைகளும், மருந்து வியாபாரமும், இருந்தனவெனக் காட்டத்தக்க சான்றுகளில்லை. சிலப்பதிகாரத்திலும், சோழநாடாவது, பாண்டியநாடாவது வைத்தியர் வீதிகளையும், மருத்துவ சாலைகளையும் கொண்டுள்ளதெனக் கேட்டிலோம். ஏனெனில் சிகிச்சைக்கு வேண்டிய மருந்துகள் இலவசத்தில் எங்கும் கிடைக்குமாதலின், இக்காலத்தில் நம்மவர் ஓம்புவது போல் மருந்துக்கடைகளை அக்காலத்தில் எவரும் மதிக்கவில்லை. ஆயினும் கல்வியின் ஒருபாகமாக ஆயுள்வேதக் கலையைக் கற்றோர்யாவரும் பெரும்பாலும் பிறருக்கு இலவசத்தில் மருந்து தந்து உதவினர்.

மருந்துகளிற் சிறந்தது உணவுப் பொருள்களுடன் நாம் உபயோகிக்கும் கடலுப்பே. இது வைத்திய மர்மமெனப்படும். ரசாயனத்தில் எல்லாப்பரிட்சையினும் ஆழ்ந்ததாய் எல்லா வஸ்துக்களும் அல்லவென நீக்கும் ஆராய்ச்சியின் அந்தத்தில் உப்பு (Sodium Chloride) நிற்பதாகும். இக்காலத்திலும் சர்வகலாசாலை ராசாயன மாணாக்கர்கள் இதைஅறிவர். இப்பொருளே உணவுப்பொருளுக்குச் சுவையளிக்கும். ("உப்பில்லாப்பண்டம் குப்பையிலே" என்னும் உலக வழக்கப் பழமொழி காண்க) இதைப் பரமனுக்குச் சிலேடையாய் அப்பர் மொழிந்தார் போலும். அடியிற் கண்ட செய்யுளைக் காண்க:—

மருந்து வானவர் தானவர்க் கின்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்
பொருந்து பூண்முலை மங்கைநல் லாளொடும்
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே.
திருவெறும்பியூர் - திருக்குறுந்தொகை 3.

மருந்தாயும் இன்சுவைப்பொருளாயு முள்ள புண்ணியன் கண்ணுதலாயும் உமாதேவியுடன் கூடியவனாயும் உள்ளான். உப்பை ஆராயுங்கால், வடவமுகாக்கினியின் தன்மைபோல் கொடுமைபெற்ற

* புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் றன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி யானை
வெண்ணீறு செம்மேனி விரவி னானை
வரையுடைய மகடவஞ்செய் மணாளன் றன்னை
வருபிணிநோய் பிறவிக்கு மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே
திருநாரையூர் - திருத்தாண்டகம் 5.

† பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூ ரடிகளை நான் கண்ட வாறே.
திருவாய்மூர் - திருத்தாண்டகம் 8.

நீர்ப்பொருளும் (Water of Crystallisation) சாந்த மூர்த்தமாய்ப் பார்வதிதேவியாருக்கு ஒப்பிடக் கூடியதாய் இரத்திற்கு இன்றியமையாததான எறும்பு போல் எதிலும் ஊடுருவிச் செல்லத்தக்க வல்லமை யுடைய நல்ல பொருளும் சேர்ந்தானதாய்க் காணப் படும். மருந்துகொடுக்கும்போது நமது நாட்டு வைத்தியர்கள் "கடும்பத்தியம்" என்று உணவை, பிணியாளிக்கு வரையறுக்கும்போது "சுட்ட உப்பு", "வறுத்த புளி"களில் உள்ளே நின்று பிரியாது காணப் படும் விஷநீரானது வெளியில் வரவும், உப்பு வேறு நிறமும் குணமும் பெற்று மிருதுவாய்க் காணப்படும். இச்சுட்ட உப்பை அருந்தினல் தேகத்திலுள்ள பல விஷநீர்களை அது கவருமென்பது பல பண்டிதர் துணிவாம்.

உப்பானது எப்பொருளையுஞ் சுண்ணமாக்குவதற் குப் பயன்படும். ஆயினும் அது மனிதத்தன்மை யுடையவர்களுக்குச் சுன்னமாவதில்லை. ஆயின் அதுவே திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்த அமுதம் என்னலாம். திரிபுரத்தை நீறாக்கிய காதையின்பின் னர் இவ்வைத்தியதத்துவம் அமைந்திருப்பதை, அடியிற் கண்ட பாசுரத்திலும் சிலர் அநுமானிப்பர். அறிஞர் ஆராய்க:—

ஆயிரந் திங்கள் மொய்த்த வலைகட லமுதம் வாங்கி
யாயிர மசுரர் வாழு மணிமதின் மூன்றும் வேவ
வாயிரந் தோளு மட்டித் தாடிய வசைவு தீர
வாயிர மடியும் வைத்த வடிக ளாரூர ஞரே

திருவாரூர் - திருநேரிசை 10.

கடலின் உப்பின் தன்மையே அதன் வலிவுமாம்.

*அதனிடத்துள்ள அமுதே தேவர்களுக்கு அளித்த அமிர்தம். அதனிடையிருந்த நஞ்சை அரன் உண்டு நெஞ்சில் வைத்தது என்பர் சில பண்டிதர்.

உப்பு உணவுப் பொருள்களைச் சீர்திருத்திச்சுவை படச் செய்வதுபோல், எல்லா மருந்துகளையும் சுத் தஞ்செய் கருவியுமாகும். பெரும்பாலும் உலோகங் களைச் சுத்திசெய்யவும், பஸ்பம் செய்யவும், சுன்னம் செய்யவும் பயனும். தாழ்ந்த பொருள்களை மேலாக் கும் தன்மை உப்பினிடமுண்டு. இதன் தன்மையை எண்ணியோ சிவபெருமானை வர்ணிக்குங்கால் திரு நாவுக்கரசும்

குலங்கொடுத்து கோணிக்க வல்லான் றன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்த மாட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி ஞனைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கு நம்பியை நள்ளாற் ருனை
நானடியே நினைக்கப்பெற் றுய்ந்த வாறே

திருநள்ளாறு - திருத்தாண்டகம் 6.

[உப்பின் சம்பந்தத்தால் சிராகு மருந்துகளும் தங் கள் பழய உருவமே மாறி, குணமும் மாறி எதிர் பாராத நற்பயனளிப்பது வைத்தியர் அறிந்ததேயாம்.]

* உரக்கடல் விடத்தினை மிடற்றிலுற வைத்தன்
றரக்கனை யடர்த்தருளு மப்பனிட மென்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி யுண்டு
பரக்குறு புனற்செய்வினை யாடபழு வூரே.

சம்பந்தர்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[28-வது பக்கத் தொடர்ச்சி]

26. அள்ளி லைக்குவ ளைத்தடமேய்ந் தசைஇக்
கள்ள லைத்த கவுட்கரு மேதிபா
லுள்ள லைத்தொழு கக்குடைந் துண்டலாற்
புள்ள லைத்த புனல புலங்களே. 21.

புலங்கள் - (மருத நிலத்திலுள்ள) கழனிகள்—அள் இலை - நெருங்கிய இலைகளையுடைய, குவளைத்தடம் - குவளை நிறைந்த குளங்களை, மேய்ந்து - மேய்ந்து, அசைஇ - அசைபோட்டுக்கொண்டு, (அதனல்), கள்- தேனனது, அலைத்த - பெருகிய, கவுள் - வாய்களை யுடைய, கரு மேதி - கரிய எருமைகள் (வந்து படியும் போது) பால் - அவைகளின்பால், அலைத்து உள் ஒழுக - அலையிட்டு (அவ்வயல்களின்) உள்ளே ஒழுக, (அப்பாலை) குடைந்து உண்டலால் - முழுகி உண்ணு வதால், புள்-அன்னப்பறவைகள், அலைத்த - அலைக் கின்ற, புனல - நீரை உடையன.

கம்பர் கூறியபடி 'ஊரினின்ற கன்றுள்ளிட வுண் முலை தாரை' கொண்டதால் இவ்வெருமைகளுக்குப் பால் ஒழுகியிருத்தல் வேண்டும். நீரினின்று பாலைப் பிரித்துண்ணும் வன்மைஅன்னத்திற்கேயுளதாதலால் இங்குப் புள் என்பதை அன்னமெனக் கொண்டோம்.

27. கெண்டை யஞ்சினை மேய்ந்து கிளர்ந்துபோய்
முண்ட கத்துறை சேர்ந்த முதலைமா
வண்டல் வார்கரை மாமக ரக்குழாங்
கண்டு நின்று கனலுங் கழியெலாம். 22.

கழி எலாம் - (நெய்தல் நிலத்து) நீர்க்கழிகளில் எல்லாம், கெண்டை அம் சினை மேய்ந்து - சேல்மீன் களின் முட்டைகளைத்தின்று, கிளர்ந்து போய் - களித் துச்சென்று,முண்டகத் துறைசேர்ந்த - தாமரை மலர் களுடைய துறையைச்சேர்ந்த, முதலைமா -முதலைகளை, வண்டல் - வண்டலுடைய, வார் - நீண்ட, கரை - (கடற்) கரையிலுள்ள, மா மகரக் குழாம் - பெரிய சுறுமீன்களின் கூட்டம், கண்டு நின்று - பார்த்து நின்று, கனலும் - கோபிக்கும்.

முதலையை மகரம் கனலும் என முடிக்க. மீனினத் திற்குப் பகையாய் முதலை அவைகளின் சினையைத் தின்பதால் சுறுமீன்கள் கோபங்கொண்டன. சுறு பெரிய மீனதலால் கழியுள் வந்து முதலையை நலிய இயலாமல் கடற்கரைநின்றே முதலைகளைக் கண்டு கனன்றன. வண்டல், என்பதற்கு மகளிர் சிற்றில் முதலியன கோலி மணலில் விளையாடும் விளையாட்டு என்னும் பொருளும் உளது. ஆயின், வண்டல் வார்

கரை எனும் தொடர், மகளிர் விளையாடும் நீண்டகரை எனப் பொருள்படும்.

28. கண்ணி லாங்கழை யின்கதிர்க் கற்றையு
மண்ணி லாங்குரல் வார்தினை வாரியு
மெண்ணி லாங்க விளைவன வீட்டமு
முண்ணி லாங்குல வாமை யுயர்ந்தவே. 23.

———

கண் - கணுக்கள், நிலாம் - விளங்கும், கழையின் - மூங்கில்களின், கதிர்க்கற்றையும் - கற்றையான கதிர்களும், மண்ணில் - நிலத்தில், ஆம் - (விளைவது ஆகும்) குரல் - கதிர்களையுடைய, வார் - நீண்ட, தினை - தினைப்பயிரின், வாரியும் - மிகுதியும், எண் இல் - கணக்கில்லாமல், விளைவன - விளைவனவாகிய சோளம் முதலிய பயிர்களின், ஈட்டமும் - தொகுதியும், உண்ணில் - எவ்வளவு உண்டாலும், உலவாமை - குறையாமல், ஆங்கு - அந்நாட்டு மலைகளில், உயர்ந்த - வளர்ந்தன.

மூன்றுவதடியில் 'ஆங்க' வென்பது அசை.

———

29. பேழ்த்த காயின பேரெட் பிறங்கிணர்
தாழ்த்த காயன தண்ணவ ரைக்கொடி
சூழ்த்த காய்த்து வரைவர கென்றிவை
மூழ்த்த போன்றுள முல்லை நிலங்களே. 24.

முல்லை நிலங்கள் - முல்லை நிலங்களில், பேழ்த்த - பெரிய, காயின - காய்களை உடைய, பேர்எள்- பெரிய எள்ளுச் செடிகளும், பிறங்கு-விளங்குகின்ற, இணர்-கொத்துக்களையுடைய, தாழ்த்த - தழைத்த, காயன - காய்களையுடைய, தண் - குளிர்ந்த, அவரைக் கொடி - அவரைக்கொடிகளும், சூழ்த்த - அடர்ந்த, காய் - காய்களையுடை, துவரை- துவரைச் செடிகளும், வரகு- வரகுப் பயிரும், என்று இவை - என்னும் இவை, மூழ்த்த போன்று - ஒன்றை யொன்று மொய்ப்பன போன்று (நெருங்கி), உள - இருக்கின்றன.

———

30. மோடு கொண்டெழு மூரிக் கழைக்கரும்
பூடு கொண்ட பொதும்பரொ டுள்விராய்த்
தோடு கொண்டபைங் காய்துவள் செந்நெலின்
காடு கொண்டுள கண்ணக னாடெலாம். 25.

கண் அகல் நாடு எலாம் - இடம் அகன்ற (மருத) நாடு எல்லாம், மோடு கொண்டு - உயர்ந்து, எழும் - வளரும், மூரி-வலியமைந்த,கழை -தண்டுகளையுடைய, கரும்பு - கரும்புகளை, ஊடுகொண்ட-நடுவேகொண்ட, பொதும்பரொடு - சோலைகளோடு,உள்விராய்-சேர்ந்து கலந்து, தோடுகொண்ட-குலையாகிய,பைங்காய்-பசுமையான கதிர்கள், துவள் (பாரத்தால்)துவள்கின்ற, செந்நெலின் - செந்நெற்பயிர்களது, காடு - மிகுதியை, கொண்டு உள - கொண்டிருக்கின்றன.

விராவு என்னும் பகுதியடியாகப் பிறந்த வினையெச்சம் விராய் என்பது.

———

31. சங்கு நித்தில முந்தவ ழிப்பியுந்
தெங்கந் தீங்குலை யூறிய தேறலும்
வங்க வாரியும் வாரலை வாரியுந்
தங்கு வாரிய தண்கட னாடெலாம். 26.

தண்கடல் நாடு எலாம் - குளிர்ச்சிபொருந்திய கடலைச் சேர்ந்த நாடு எல்லாம்;—சங்கும் - சங்குகளும், நித்திலமும் - முத்துக்களும், தவழ் இப்பியும் - தவழ்கின்ற சிப்பி என்னும் சந்துக்களும், தெங்கு அம் தீம் குலை ஊறிய தேறலும் - தென்னையின் அழகிய இனிய குலைகளினின்று ஊறிய கள்ளும், வங்கம் - கப்பல்களின், ஆரியும்-சிறப்பும், வார் அலை வாரியும் - நீண்ட அலைகளின் மிகுதியும், தங்கும் - நிலைபெற்றிருக்கின்ற, வாரிய -நீர் உடையன.

ஆரி, என்பது பெருமை அல்லது சிறப்பு என்னும் பொருளில் ஆரியன் என்னும் பதத்தில் வந்திருக்கின்றது. வாரி என்பது, கடல் நீர் மிகுதி எனப்பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல். இதற்குப் பிற பொருள்களும் உள.

———

வேறு

32. கொடிச்சியர் புனத்தயற் குறிஞ்சி நெய்பக
ரிடைச்சியர் கதுப்பயற் கமழு மேழையங்
கடைச்சியர் களையெறி குவளை கானல்வாய்த்
தொடுத்தலர்பிணையலார்குழலுட்டோன்றுமே27

கொடிச்சியர் - குறிஞ்சிநில மாதர்களது, புனத்து அயல் -(தினை முதலிய வளர்கின்ற) கொல்லைகளுக்கு அயலில் உள்ள, குறிஞ்சி - குறிஞ்சிமரத்தின் மலர்கள், நெய்பகர் - நெய்விற்கின்ற, இடைச்சியர்-(முல்லைநில) இடைச்சியர்களது, கதுப்பு அயல் - கூந்தலினிடத்தில், கமழும் - மணக்கும். ஏழை அம் கடைச்சியர் - மடமைபொருந்திய அழகிய மருதநிலமாதர்கள், களை எறி குவளை - (வயலில் முளைத்திருந்த) களைகளை (பறித்து) எறிந்த குவளை, கானல்வாய் - கடற்கரைச் சோலையினிடத்து, தொடுத்து அலர்- தொடுத்தலர்ந்த, பிணையலார்-மாலையை யணிந்த (நெய்தல் நிலப்) பெண்களின், குழலுள்-கூந்தலினுள், தோன்றும்-விளங்கும்.

கதுப்பயல், கானல்வாய், என்பவைகளில் அயல் வாய் என்பன ஏழனுருபுகள்.

இச்செய்யுளும் அடுத்த செய்யுள்களும் திணைமயக்கம். ஒருதிணைக்குரிய கருப்பொருள்கள் வேறு திணையில் வந்து தோன்றுவதாகக் கூறுமாற்றுல் அத்திணைகள் நெருங்கியுள்ளனவென்று கருவிகள்காட்டுவதைத் திணைமயக்கமென்பர். அப்பொருள்கள் திணைமாறித் தோன்றியதற்குக் காரணமுங் கற்பித்துக் கம்பர் கூறுவது சிறப்புடைத்து. கோசலநாட்டில் நெய்தற்கும் மருதத்திற்கும் உள்ள தொடர்பைச் சொல்பவர்,

"குற்ற பாகு கொழிப்பவர் கோணெறி
கற்றி லாத கருங்க ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலிற்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே."

என்று பாடினர்.

இதன் பொருள்:—மருதத்தில், நறுக்கி உலர்த்திய பாக்கைக்கொழிக்கின்றவர்கள் கொழித்துவிலக்குவது யாதெனில், ஆடவர்களைக் கடைக்கட்சாடை போக்கித் தம்வயப்படுத்தும் மாயநெறி யறியாத கரிய கண்களையுடைய நெய்தல்நிலச் சிறுமிகள் முறம் நிறைய வாரிவந்து தம் முன்றிலில் விளையாட்டு வீடுகள்கட்டி அவைசெம்மையாய் அமையாத சினத்தால்அழித்துச் சிதறிய முத்துக்களே. அதாவது, நுளைச்சியர் அவ்வாறு சிதறியமுத்து உழத்தியர் உலர்த்தியிருந்த பாக்கில் விழுந்து கலந்ததால் இவர் பாக்கைக் கொழிக்கும்போது முத்துக்களே கொழிபட்டனவாம்.

———

33. கலவர்தஞ் சிறுபறை யிசையிற் கைவினைப்
புலவர்தேம் பிழிமகிழ் குரவை பொங்குமே
குலவுகாற் கோவலர் கொன்றைத் தீங்குழ
லுலவுநீ ளசுணமா வுறங்கு மென்பவே. 28.

கலவர்தம் - நெய்தல்நில மக்களது, சிறுபறை -சிறியபறையினுடைய, இசையில் -ஓசையால், கைவினை - நுண்கலையில் வல்ல, புலவர் - கூத்தர்கள் ஆடும், தேம் பிழி - இனிமை யொழுகி, மகிழ்- மகிழ்கின்ற,குரவை குரவைக்கூத்தானது, பொங்கும் - சிறந்தோங்கும். குலவு - வளைந்த, கால் - கால்களையுடைய,கோவலர் - இடையர்களது, கொன்றை தீம் குழல் -கொன்றைக் காயாலாகிய இனிய குழலோசையால், உலவு - சுழல்கின்ற, நீள்-விளங்கும், அசுணமா-கேகயப்புள், உறங்கும் - தூங்கும்.

கலவர் - கலம் உடையவர், கலவரென்றாயது. கலம் மரக்கலம். அவ்வாறே புலவர் - புலம் உடையவர், (புலம் - வயல்) என்னும் பொருள் கொண்டு மருத நிலமாக்க ளென்றுரைக்கலாம். எனினும், கைவினை - என்பது நுண்கலையைக் (Fine arts) குறிக்கும். கூத்து அல்லது நாடகமும் நுண்கலையாதலால் இங்குப் புலவர் என்பதைக் கூத்தர் என்னும் பொருளிற் கொண்டோம். குரவை என்பது ஓர்வகைக் கூத்து. அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரவுரையில், "குரவையாவது எழுவரேனும் ஒன்பதின்மரேனுங் கைகோத்தாடுங் கூத்து" என்றார். ஐங்குறுநூற்றி னுரையாசிரியர் குரவையை, மகளிர் தங் காதலரோடு ஆடுமாட்டமெனக்கொண்டுளரென்று தோன்றுகிறது. இச்செய்யுளின் முன்னிரண்டடிகள் நெய்தற்கும் மருதத்திற்குந் திணைமயக்கங்காட்டுவன. மருதத்திற்குக் குரவையுரியதென்று கம்பரும் பின்கருதினர். பின்னிருஅடிகளிலுள்ள மயக்கம் முல்லைக்குங் குறிஞ்சிக்கு மாம். குலவு கால் கோவலர், என்றது குழல் வாசிக்கும் போது ஒரு காலை மறுகாலின்மீது வளையவைத்து நிற்றல் வழக்கமாதலின். "குலவுச்சினைப் பூக்கொய்து" என்னும் தொடர்க்கு 'வளைந்த கோட்டுப்பூவைப் பறித்து, எனப் பொருளுரைப்பர் புறநானூற்றிற்குரை கண்டவரும்

அசுணமா - கேகயப்புள். இது மலையில் வாழ்வதும் இசைநுணுக்க மறியவல்லதுமெனக் கருதப்படுகின்றது. 'கோதில்யாழ் நறையடுத்த அசுண நன்மா' என்றார் கம்பரும். ஈற்றுச்சீர் 'என்பவே' என்பது அசை.

---

34. மாக்கொடி யானையு மௌவற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பருங் கான ஞாழலுந்
தூக்கொடி கமழ்ந்துதாந் துறக்க மொக்குமே29.

மா - பெரிய, கொடிய - நீண்ட, யானையும் - யானைகளும், மௌவல் பந்தரும் - காட்டு மல்லிகைப் பந்தல்களும், கார்க்கு - கார்காலத்தில், ஒடி - மலர்கின்ற, முல்லையும் - முல்லையும், மல்லிகை பூகொடி - மல்லிகைப்பூவின்கொடிகளையுடைய,பொதும்பரும் - சோலையும், கான - வாசனையுடைய,ஞாழலும் - குங்கும மரங்களும்,கலந்து-சேர்ந்து, தூ-பரிசுத்தமான, கொடி-வாசனையை,கமழ்ந்து-வீசி, தாம்-அந்நாட்டின் இடங்களெல்லாம், துறக்கம் -சுவர்க்கத்தை, ஒக்கும் - நிகர்க்கும்.

யானையின் மணம் அது பொழியும் மதநீராலுண்டாவது. இம் மதநீரிற்கு வேங்கைமலரின் மணமும் ஏழிரும்பாலையின் மணமும் உளது. 'விலக் கருங் கரிமதம் வேங்கை நாறுவ' என்றும், 'பூத்த வேழிலம் பாலையைப் பொடிப் பொடியாகக் காத்திரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு" என்றும் கம்பராமாயணத்தில் இக்கருத்துக்கள் வரக்காணலாம். கொடி என்னும் சொல்லை,நீண்ட என்னும் பொருளில், ஐங்குறுநூற்றின்கண் ஓரம்போகியார் வேழப்பத்தில் உபயோகித்துளர்.

முல்லை கார்காலத்தில் மலரும் என்பது சிந்தாமணி முதலிய நூல்களால் வெளிப்படை. கான் - வாசனை; கான - வாசனையை உடைய. அ, உடைமைப் பொருள் விகுதி. நான்காமடியில் வரும் 'கொடி' என்னும் சொல் வாசனை எனப் பொருளாயது.

நாட்டுச் சருக்கம் முற்றிற்று.

யாப்பிலக்கணம்

அசை

[31-வது பக்கத் தொடர்ச்சி]

சென்றவாரம், சில எழுத்துக்கள் தம்முடைய மாத்திரையினின்று குறுகிஒலிக்கும் என்பதைப்பற்றிச் சொல்லி, ஐகாரம் தன்னைக் குறிக்கும்போது பெறுவதாகிய இரண்டுமாத்திரையைச் சொற்களில் சேர்ந்து வரும்போது பெறாமல், முதலிலாயின் ஒன்றரை மாத்திரையும், இடையிலும் கடையிலும் ஒரு மாத்திரையும் பெறுவதாகின்றதையும், அவ்வாறே ஒளகாரம் மொழிக்குமுதலில் நின்று ஒன்றரை மாத்திரை பெறுவதையும் கண்டோம். ஒளகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் வருவதில்லையாகையால் இது ஐகாரத்தைப்போல் ஒரு மாத்திரைக்குக் குறுக இடமில்லை. இனி உகர இகரங்கள் தமக்கு இயற்கையாயுள்ள ஒரு மாத்திரையிலும் குறுகி ஒலிக்க நேர்வதைப் பார்ப்போம். அவ்வாறு உ என்னும் உயிர் எழுத்துக் குறுகி ஒலிக்கும்போது அதற்குக் குற்றிய லுகரம் என்று பெயர். குறுகிய தன்மையையுடைய உகரம் என்பது அப்பெயரிற்கு அர்த்தம்.

உகரம் வார்த்தைக்கு முதலினும் இடையிலும் கடையிலும் ஆகி, மூவிடத்திலும் வரலாம். முதலில் வரும்போது அது குறுகாது. உரம், என்ற வார்த்தையையும் அரம் என்ற வார்த்தையையும் உச்சரித்துப் பாருங்கள். அரம் என்பதன் முதலிலுள்ள அகரத்திற்கு எவ்வளவு மாத்திரை உச்சரிப்பு இருக்கின்றதோ அவ்வளவு உச்சரிப்பு உரம் என்பதின் முதலிலுள்ளஉகரத்திற்கும்இருப்பதைஉங்கள்காது அளந்து கொள்ளும். தனிஉயிராயில்லாமல் மெய்யெழுத்தோடு சேர்ந்த உயிர்மெய்யெழுத்து வார்த்தைக்கு முத

லெழுத்தாக இருந்தாலும் அதனிலுள்ள உகரமும் (நுந்தை என்கிற ஒரே ஒரு வார்த்தையில் தவிர) குறு காது.குதிரை, முதலை, நுதல் என்பனபோன்ற சொற்க ளில் முதலிலுள்ள உயிர்மெய்யெழுத்தினது உகர மும் குறுகாமல் தன் ஒரு மாத்திரையைப் பெற்று ஒலிப்பதைத் தேர்ந்துகொள்ளுங்கள். இடையிலே வருகின்ற உகரங்களும் குறுகா. உயிரெழுத்து வார்த் தைக்கு நடுவே வராதாகையால் உயிர்மெய்யிலுள்ள உகரத்தைத்தான் இங்கே நினைத்துக்கொள்ள வேண் டும். கடுமை, பதுமை, கருடன், கழுதை என்பன போன்ற சொற்களில் உகரம் மெய்யோடு சேர்ந்து சொல்லுக்கு நடுவே வரலாகின்றது. உயிரினுடைய மாத்திரையையே அது சேர்ந்ததாலான உயிர்மெய் எழுத்துக்கள் பெறும் என்று முன்னே சொல்லியிருக் கின்றேன். அதன்படி டு, து, ரு, ழு என்னும் உயிர் மெய்யெழுத்துக்கள் ஒவ்வொரு மாத்திரைகொண்டு ஒலிப்பதை இங்கு உணர்வீர்.

எனின், உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமானால் அது மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் குறுகக் கூடும். மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் குறு கக்கூடும் என்றதால், அப்படி இறுதியில் வரும்போ தெல்லாம் குறுகிவிடும் என்ற அர்த்தம்இல்லை. சிற்சில சமயங்களிற்றான் குறுகும். ஆதலால் அப்படிக் குறுகு வது எப்பொழுது என்று இனிப் பார்ப்போம்.

உகரம் மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் தன் ஒரு மாத்திரையில் குறுகி அரைமாத்திரையாக ஒலிக்க இயலும் என்று முன் சொன்னேன். அப்படிக் குறுகி ஒலிக்கும்போது அவ்வுகரத்திற்குக் குற்றிய லுகரம் என்று பெயர். மொழிக்கு இறுதியில் வரும் போதுதான் உகரம் குறுகும் என்று சொன்னேனே யொழிய, அவ்வாறு இறுதியில் வரும்போதெல்லாம் குறுகும் என்று சொல்லவில்லை. வீடு என்ற சொல் லின் இறுதியில் இருப்பது உ என்னும் எழுத்து. அந்த உகரம் ட் என்னும் மெய்யின்மேல் ஏறி அந்த வார்த்தையின் கடைசிச் சப்தமாயிருப்பதை உச்சரித் துப் பாருங்கள்—வீ ட் உ—. ஆகையாற்றான் அதனை ஈற்றுகரம் என்கின்றோம்.

வீடு என்ற சொல்லையும் விடு என்ற சொல்லையும் உச்சரித்துப்பாருங்கள். அப்படியே, சேறு செறு, போது பொது, பாகு பகு, பாசு பசு என்பன போன்ற இவ்விரு சொற்களை அடுத்தடுத்து உச்சரித்துப் பாருங்கள். பார்த்தால் வீடு சேறு போது பாகு பாசு என்ற சொற்களின் ஈற்றிலுள்ள உகரங்களே குறுகி ஒலிப்பது நம் காதிற்குத் தெரியலாகும். மற்று, விடு செறு பொது பகு பசு, என்பனபோன்ற வார்த்தைகளில் உகரம் ஈற்றிலிருந்தாலும் அது குறுகி ஒலிக்கவில்லையாகையால் குற்றியலுகரம் இல்லை. குறு காமல் தன்னுடைய ஒரு மாத்திரையைப் பெற்று ஒலிக்கின்ற உகரத்தை முற்றியலுகரம் அல்லது முற் றுகரம் என்றழைப்பர்.

முன்சொன்ன உதாரணங்களிலிருந்து ஒன்று உண ரலாம். அவைகளெல்லாம் இரண்டே எழுத்துக்களை உடைய சொற்கள். அவ்விதம் இரண்டு எழுத்துக் களை உடைய சொற்களில் ஈற்றில் வரும் உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமானால் வீடு காசு சேறு பாகு போது போன்ற சொற்களைப்போல் முதலெழுத்து நெடில்களாகவே இருப்பது தெரிகின்றது.

இனி, உடு ஊடு உதடு உதவு, என்று நான்கு வார்த் தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளில் முத லிரண்டு வார்த்தைகளும் இரண்டு இரண்டு எழுத்துக் களை உடையன. மற்ற இரண்டு வார்த்தைகளும் இரண் டிற்கு மேற்பட்ட எழுத்துக்களை உடையன. இவை களில் ஊடு உதடு என்ற இரண்டுசொற்களின் ஈற் றில் உள்ள உகரங்களே குறுகி ஒலிக்கும். உடு, என்ற சொல்லின் ஈற்றில் உள்ள உகரம் குறுகாததற்குக் காரணம் தெரியும். இரண்டெழுத்துச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் குறுகி ஒலிக்கவேண்டுமா னால் முதலெழுத்து நெடிலாக இருக்கவேண்டுமே. உடு, என்பதில் முதலெழுத்தும் குறிலாகையால் ஈற்று உகரம் குறுகவில்லை. ஊடு என்பதில் முதல் எழு த்து ஊ நெடிலாகையால் ஈற்றில் டு வில் உள்ள உக ரம் குறுகியது. உதடு, என்பது இரண்டிற்கு மேற் பட்ட எழுத்தை உடையது. பலாசு, பாடாது படகு இறும்பூது, வேண்டு, என்பனபோன்ற சொற்களில் இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் இருப்பதால் அந்த வார்த்தைகளில் ஈற்று உகரத்திற்கு முன் இருக் கின்ற எழுத்துக்கள்எல்லாம் நெடிலாயிருந்தாலும் எல்லாம் குறிலாயிருந்தாலும், சில நெடிலாகவும் சில குறிலாகவும் இருந்தாலும், ஈற்றிலுள்ள உக ரம் குறுகலாம். உதடு என்னுஞ் சொல்லின் ஈற்றி லுள்ள உகரம் குற்றியலுகரம். ஆனால், 'உதடு உதவு' என்ற இரண்டு சொற்களையும் உச்சரித்துப் பாருங் கள். உதடு என்ற சொல்லின் இறுதியில் ட் என் னும் எழுத்தின் மேல் ஏறியிருக்கின்ற உகரம் குறுகி யிருக்கின்றது. உதவு என்னும் சொல்லின் இறுதி யில் வ் என்னும் எழுத்தின்மேல் ஏறியிருக்கின்ற உகரமோ குறுகவில்லை. ஆதலால் இரண்டிற்கு மேற் பட்ட எழுத்துக்களை யுடைய சொற்களின் இறுதி யில் வந்தாலும் உகரம் குறுகியே தீரவேண்டுமென்ற நியதி இல்லை.

முன்னர், உதடு என்னுஞ் சொல்லின் ஈற்றி லுள்ள உகரம் குறுகி ஒலிக்கும் என்றும், ஆனல் உதவு என்னுஞ்சொல்லின் ஈற்றிலுள்ள உகரம்குறுகி ஒலிக்காமல் தன் ஒரு மாத்திரையையும் பெற்றே ஒலிக்கு மென்பதையும் சொன்னேன். டு என்பது ட் உ என்ற இரண்டு எழுத்துக்களால் ஆனது. அந்த ட் என்னும் மெய், க் ச் ட் ப் ற் என்னும் ஆறு எழுத்துக்களில் ஒன்றாதலால், வல்லின மெய். ஆத லாற்றான் உதடு, என்னுஞ் சொல்லில் ஈற்றிலுள்ள உ குறுகியது. உதவு என்பதின் ஈற்று உகரம் வ் என் னும் இடையின மெய்யின்மேல் ஏறியிருக்கின்றது. இடையின மெய்யின்மேலும் மெல்லின மெய்யின் மேலும் ஏறிய உகரம் ஈற்றில் வந்தாலும் குறுகாது. அவைகளெல்லாம் முற்றியலுகரங்கள்.

எனவே, குற்றியலுகரத்தின் இலக்கணம் இது :—

I. க் ச் ட் த் ப் ற், என்ற ஆறு வல்லின மெய்களில் ஏதாவது ஒன்றின்மேல் ஏறிக் கு சு டு து பு று என நிற்றல் வேண்டும்.

II. அப்படி வல்லின மெய்யின்மேல் ஏறி வார்த் தைக்குக் கடைசியில் நிற்க வேண்டும்.

III. அப்படி நிற்கின்ற வார்த்தை இரண்டேஎழுத் துக்களையுடைய வார்த்தையா யிருக்குமானால், முதல் எழுத்து நெடிலாக இருக்கவேண்டும்.

IV. இரண்டிற்கு மேற்பட்டஎழுத்துக்களையுடைய வார்த்தையா யிருக்குமானால், அவ்வெழுத்துக்கள் எவையாயிருந்தாலும், அவ்வார்த்தையின் ஈற்றில் வல்லின மெய்யின்மேல் ஏறிவரும் உகரம் குற்றிய லுகரமே.

குற்றியலுகரம் என்பது இன்னதென்பதைக் கவனித்தோம். இனி அந்தக் குற்றியலுகரம் தான் ஏறி இருக்கும் மெய்யெழுத்திற்கு முன் நிற்கும் எழுத்தினால், அதாவது அந்த மெய்யெழுத்தைத் தொடர்ந்து நிற்கும் எழுத்தினால் வெவ்வேறு பெயர் பெறுவதைக் கவனிப்போம்: சுக்கு, கச்சு, மட்டு, பத்து, உப்பு, புற்று, என்னும் சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் குற்றியலுகரம் ஏறியிருக்கின்ற மெய்யெழுத்தை க், ச், ட், த், ப், ற், என்னும் வல்லின மெய்யெழுத்துக்கள் தொடர்ந்து வந்திருக்கின்றன அல்லவா? இவ்வாறு வல்லினமெய்யெழுத்துக்களால் தொடரப்பட்டு வரும் குற்றியலுகரம் வன்தோடர்க் குற்றியலுகரம் என்று சொல்லப்படும். சங்கு, பிஞ்சு, வண்டு, சிந்து, கம்பு, கன்று என்னுஞ் சொற்களில் உள்ள குற்றியலுகரம் ஏறியிருக்கும் மெய்யைத் தொடர்ந்து ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் மெல்லின மெய்யெழுத்துக்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரத்தை மேன்தோடர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகிறோம். நொய்து, மார்பு, போழ்து, ஞொள்கு, பல்கு என்னுஞ் சொற்களைக் கவனியுங்கள். இவற்றிலுள்ள குற்றியலுகரம் ஏறிய மெய்யெழுத்தைத் தொடர்ந்து இடையின மெய்பெழுத்துக்கள் வந்திருப்பதால் இவற்றை இடைத்தோடர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகிறோம். பாகு, பாசு, ஏடு, போது, ஆபு, சேறு என்னும் சொற்களில் ஈற்றில் உள்ள குற்றியலுகரம் ஏறிய மெய்யெழுத்தை பா, ஏ, போ, ஆ, சே என்னும் உயிர் நெட்டெழுத்தும் உயிர்மெய் நெட்டெழுத்தும் தனித்தனி தொடர்ந்து வந்திருக்கின்றன. ஆகையால், இச்சொற்களில் ஈற்றில் உள்ள குற்றியலுகரத்தை நேடில்தோடர்க் குற்றியலுகரம் என்கிறோம். அஃது, இஃது என்னுஞ் சொற்களில் உள்ள குற்றியலுகரம் ஏறிய மெய்யைத் தொடர்ந்து ஆய்த எழுத்து வந்துள்ளது. இதனால், இச்சொற்களில் உள்ள குற்றியலுகரத்தை ஆய்தத்தோடர்க் குற்றியலுகரம் என்று சொல்கிறோம். வரகு, அரசு, குருடு, பிறிது, மரபு, பயறு என்னும் சொற்களில் குற்றியலுகரம் ஏறியுள்ள மெய்யெழுத்தைத் தொடர்ந்து ர, ரு, றி என்னும் உயிர்மெய் யெழுத்துக்கள் வந்திருக்கின்றன. ஆனால், இவ்வுயிர்மெய்யெழுத்துக்களைக்கொண்டு இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரத்தை உயிர்மெய்த்தொடர்க் குற்றியலுகரம் என்று சொல்லிவிடுதல் கூடாது. ஏன் என்றால், இச்சொற்களில் குற்றியலுகரம் ஏறியுள்ள மெய்யெழுத்தைத்தொடர்ந்து நிற்பவை உயிர்மெய்யெழுத்துக்களாயினும், ஓசையைக் கவனிக்கும்போது உயிர் ஓசையே அவ்வாறு தொடர்ந்து நிற்பதை உணரலாம். உதாரணமாக, அரசு என்னும் பதத்தை எடுத்துக் கொள்ளுவோம். இச்சொல்லில் உள்ள எழுத்துகளை ஓசைக்கு ஏற்றபடி பிரித்து அமைப்போமானால் அவை அர்அ ச்உ என அமையும். இப்பொழுது கடைசியில் உள்ள உ என்னும் எழுத்துக்குற்றியலுகரம். அதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள ச் என்னும் எழுத்து அந்தக் குற்றியலுகரம் ஏறியிருக்கும் மெய்யாகும். அந்த மெய்யெழுத்தைச் சார்ந்துநிற்கும் ஓசை அ என்னும் உயிர் ஓசையே அன்றி, வேறெந்தஓசையுமன்று. ஆகையால், இப்படி உயிர்மெய் யெழுத்தால் தொடரப்பெற்ற குற்றியலுகரத்தை உயிர்த்தோடர்க் குற்றியலுகரம் என்றே சொல்கிறோம்.

எனவே குற்றியலுகரமானது தான் ஏறியிருக்கும் மெய்பெழுத்திற்குப் பக்கத்தில் அமையும் எழுத்தினால் ஆறுவகைப்படும் என்பதை அறிகிறோம். அவை வன்தோடர்க் குற்றியலுகரம், மேன்தோடர்க் குற்றியலுகரம், இடைத்தோடர்க் குற்றியலுகரம், நேடில்தோடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தோடர்க் குற்றியலுகரம், உயிர்த்தோடர்க் குற்றியலுகரம் என்பவை.

1. ஈற்றிற்கு அயலெழுத்து வல்லின மேய் எழுத்தாக இருந்தால், வன்தொடர்க் குற்றியலுகரம்:— பத்து, கட்டு கச்சு, பற்று.

2. ஈற்றிற்கு அயலெழுத்து மெல்லின மேய்யாக இருந்தால் மென்தொடர்க் குற்றியலுகரம்:—வண்டு, பங்கு, பத்து, சென்று, பஞ்சு.

3. ஈற்றிற்கு அயலெழுத்து இடையின மேய்யாக இருந்தால், இடைத்தொடர்க் குற்றியலுகரம்:— கொய்து, நல்கு, போழ்து.

4, ஈற்றிற்கு அயலெழுத்து ஃ என்னும் ஆய்த எழுத்தாக இருந்தால், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்:— எஃகு, அஃது.

5. ஈற்றிற்கு அயலெழுத்து மேய்யெழுத்தாக வேனும் ஆய்தவெழுத்தாகவேனும் இல்லாமல் எந்த உயிர்மெய்யா யிருந்தாலும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். அது வல்லினமாயிருந்தாலும், மெல்லினமா யிருந்தாலும், இடையினமா யிருந்தாலும், குறிலாயிருந்தாலும், நெடிலா யிருந்தாலும், அந்த ஈற்றுக்கு அயலெழுத்து உயிர்மெய் யெழுத்தாயிருந்தால் அந்தத்தொடரிலுள்ள உகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரந்தான்:—

படகு, கழுது, கிணறு, பலாசு, இவையெல்லாம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களே. படகு, என்னும் சொல்லில் ஈற்றிற்கு அயல் எழுத்தாகிய ட வல்லினமாயிருப்பதால் அந்தக் குற்றியலுகரத்தை வன்தொடர்க் குற்றியலுகரம் என்று எண்ணுதீர்கள். ட, வல்லினஉயிர்மேய். எனினும், இதுஉயிர்த்தொடர்தான். வன்தொடராக வேண்டுமானால், ஈற்றிற்கு அயலெழுத்து வல்லின மேய் ஆக அன்றோ இருக்கவேண்டும்? உட்கு, என்றிருந்தால் ட் என்பது வல்லின மேய்யாதலால் இது வன்றொடர்க் குற்றியலுகரம். அவ்விதமே, கழுது, இடைத்தொடர் அன்று; கிணறு மென்றொடரன்று; இவைகளும் உயிர்த்தொடர்களே.

பலாசு என்பதுகூட உயிர்த்தொடர்தான். நெடிற்றொடர் அன்று. ஈற்றிற்கு அயலெழுத்து, பலாசு, இறம்பூது, என்னும் சொற்களில்போல் நெடிலாக இருந்தாலும் அது நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று நினைக்கக்கூடாது.

6. இரண்டே எழுத்தை உடைய சொற்களின் கடைசியில் உள்ள உகரம் குற்றியலுகரமாயிருக்கும் போது முதலெழுத்து நெடிலாகத்தான் இருந்து தீர வேண்டி இருக்கின்றது. அப்பொழுதுதான் அதற்கு நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[34-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள்-Perception)

கண்:—

நாம் கண்என்று வழங்குவது, கண்ணுண்டையும் (Eye-ball), அதனை இயக்கிவைக்கும் கண் தசைகளும் (Muscles), அஃது ஈரம்புலராதபடி நீரரும்பி நிற்கும் கண்ணீர்க்கழலைகளும் (Tear-glands), கூடியதோர் உறுப்பேயாகும். ஏறக்குறைய முற்றுஉருளை வடிவாயிருத்தலின் அதனைக் கண்ணுண்டை (Eye-ball) எனல் தகும். அஃது ஒரு விரற்கடை (Inch) குறுக்களவு உள்ளதாய்க் கட்குழியில் (Eye-socket) பொதிந்து நிற்கின்றது. இதனுடைய முன்புறத்தே மற்றொரு சிறிய உண்டையை உள்ளழுத்திப் பொதிந்துவைத்தாற் போலக் கருவிழி (Cornea) பிதுங்கித் தோன்றுகிறது. கண்ணுருளை, முப்போர்வை போர்த்து விளங்குகிறது. கண்ணுண்டையின் காவற்கு உபாயமாகப் பயன்படும் வெள்ளை விழியே (Scelera) அதனது திண்ணிய மேற்போர்வை யாகும். இவ்வெள்ளை விழியோ கண்ணுண்டை முழுதும் சுற்றிநின்று கருவிழியின் விளிம்புவரைவந்து நின்றுவிடுகிறது. கருவிழி ஒளி நுழை பொருளாகும். வெள்ளிநீர் (Mercury) பூசப் பெறாத கண்ணாடிகளின் வழியாகப் பிறபொருள்களைக் காணுதல் கூடும். அவை ஒளியைத்தடுப்பதில்லை. ஆனால் மரம் முதலியனவோ நமக்கும் நாம் காணும் பொருள்கட்கும் இடையே நின்றால், ஒளியைத் தடைசெய்கின்றன. அதனால் பொருட்காட்சி கூடுவதில்லை. ஆகையால் கண்ணாடி முதலியவற்றை ஒளிநுழைபொருள்கள் (Transparent Objects) என்றும், மரம் முதலியவற்றை ஒளித்தடைப் பொருள்கள் (Opaque Objects) என்றும் வழங்கலாம். கண்ணுண்டையின் இடைநின்ற போர்வையோ, குருதிக் குழாய்களும், நிறக் கருவுளிகளும் தசைகளும் சேர்ந்ததோர் இருட்படமாகும். அகப்போர்வையோ கண்ணரப்புப் படர்ந்து விரியும் புலப்படமாகும். (Retina)

கண்ணே நிழற்பொறி (Camera)போன்றது. நிழற்பொறியின் முன்புறத்தே ஒருசிறு புழையுண்டு. அதற்குள் இருபுறமும் மேற்குவிந்தும் கண்ணாடி மணி(Convex Lens)புதைக்கப்பெற்றும்விளங்கும். வெளியே மரப்பெட்டி தோன்றும். உட்புறத்தே, ஒளிபுகுந்து சிதறாதவாறு கறுப்புப்பூசியிருப்பார்கள். நிழலோவியம் பிடிக்கும்போது, புழைவழியாகவரும் ஒளி, ஒருவகை மருந்துபூசிய கண்ணாடியிலேவிழும். விழுந்த இடத்தில் உள்ளமருந்தை அவ்வொளி அவ்வொளிக்குத் தக்கவாறு அரித்துத் தின்று விடுதலால், அவ்வொளிநிழல் நன்கு பொறிக்கப்பட்டுஅக்கண்ணாடியில் விளங்குகிறது. பெட்டிக்குள் ஒளிபரவி நிறைந்தால் ஓவியம் விழுவதில்லை. ஒளியைப் பரவவிடாது ஒருமுகப்படுத்தினால்தான், பொருளின் நிழல் விழும். ஆகவே நிழலோவியம் (photograph) விழுமாறு, நிழற்பொறிப் பெட்டியை அமைத்தல் வேண்டும்; ஒளிதோன்றும் இடமும், நிழலிடுமிடமும் ஒருநேர்க்கோடிடை நின்றாற்போல நேரேவிளங்கினால் அந்நிழலொளியை எதிரொளி (Reflection) எனலாம். ஆனால், எனது விரலொன்றைத் தண்ணீர்க்குள் சிறிதளவும் தண்ணீர் மட்டத்திற்குமேல் சிறிதளவும் தோன்றத் தண்ணீரில் தோய்க்கின்றேன். தண்ணீருள் விளங்கும் விரல்வடிவமும் தண்ணீருக்குமேல் விளங்கும் விரல்வடிவமும் நேர்க்கோடு இட்டாற்போலக் காணப்படுவதில்லை. தண்ணீருள் காணப்படுவது சிறிது தத்திச் சென்றதுபோல மடங்கிக் காணப்படுகிறது. ஈதே திரிபொளி (Refraction). நீரின்மேல் உள்ள விரல், காற்றிடையுள்ளது; கீழுள்ள விரல் நீரிடையுள்ளது. ஒளியூடுருவிச்செல்லும் பொருள்கள் எடைநிரனிறை அல்லது அளவுச்செறி வால் (Density) வேறுபட்டபோது திரிபொளி எழுகிறது. ஊடுநிலை (Medium) வேறுபாடே திரிபொளியின் பிறப்பிடமாகும். கதிரவனின் நிழலை ஒளிப்பிழம்பாகக் காணவேண்டுமானால் என்செய்கின்றோம்? இருபுறம் குவிந்த தட்டைக்கண்ணாடி மணியொன்றுகொண்டு கதிரவன் எதிரே ஏற்றித் தாழ்த்திப் பார்த்தால் அம்மணி ஒரு குறித்தநிலையில் இருந்தபோது கதிர்செறிந்த ஒளிப்பிழம்புவட்டம் சிறிதாகவும் தெளிவாகவும் கீழே திகழ்கிறது. பலவழியிலும் பரந்துசெல்லும் கதிர்களைத் திருப்பி மடக்கி இக்கண்ணாடிமணி ஒருமுகப்படுத்துவதால் இவ்வொளிப்பிழம்பு இயைவதாயிற்று. ஆகவே, ஒளிநிழலோவியம் விழவேண்டுமானால், கண்ணாடித்தட்டை மணிபோன்ற ஊடுநிலை (Medium) ஒன்று வேண்டும். ஒளி பரவாதிருக்க வேண்டுமானால் உட்புறம் கருத்திருத்தல் வேண்டும். கருப்பல்லாத மற்ற நிறங்கள் ஒளியைப் பரவச்செய்யும் பண்பின. அன்றியும், ஒளி நுழையும் இடமும் சிறுத்திருந்தால்தான் ஒருமுகப்படுவது எளிதாகும். நிழற்பொறிப் பெட்டியில் சிறு புழையிருப்பதையும், உள்ளே கருப்பு பூசியிருப்பதையும் காண்க.

நிழற்பொறி போன்றதே கண் என்றோம். நிழற்பொறியின் மேற்பெட்டி போன்றதே வெள்ளைவிழி. உள்தோன்றும் கருப்புப்பூச்சுப் போன்றதே கண்ணுண்டையின் இடைப்போர்வையாம். கரும்படாம், அப்பெட்டிக்குள்பின்புறத்தே தோன்றுவதாகிஓவியம் பொறிக்கும் கண்ணாடி போன்றதே கண்ணுண்டையின் அகப்போர்வையாய் விளங்கும் நரம்பு வடிவமான புலப்படம். கண்ணுண்டையிலும் மணியுண்டு. கருவிழியின் பின்னே இருபுறம் குவிந்த தட்டைமணி ஒன்று உண்டு. அஃது ஒளிநுழை பொருளாகும். ஈதே கண்மணியாகும். மணித்தசைகள் இம்மணியைச்சுற்றி நின்று, இதன் வடிவைத்தட்டையாக்கியும் பருமனாக்கியும் திருத்தி யமைக்கின்றன. இக் கண்மணிக்குப் பின்னிடத்தே கண்ணுண்டையிலே, கண்குழம்பு நிறைந்திருக்கின்றது. இக்குழம்புதான் இம்மணியைத்தன்னிலையினின்றும் விழாதபடி

காக்கின்றது. கண்மணிக்குமுன்னிடத்தும் கருவிழிக்குப் பின்னிடத்தும் கருவிழிப்புனல் நிறைந்துள்ளது. உப்புநீர்போன்ற ஈது ஒளிநுழை பொருளேயாம். நீர்வடிவாய் இருப்பதால், கண்மணி தட்டையாய் நீளவும், தடித்துக் குறுகவும் இடங்கொடுக்கின்றது. கருவிழிப் புனலுக்கும் கண்மணிக்கும் இடையே வட்டப்புழையோடுகூடிய தசையொன்று காணப்படுகிறது. இப்புழையே பாவை (Pupil) யாகும். இப்பாவைத்தசை வெளியில் இருபாலிருந்தும்வரும் ஒளிகளைத் தடுத்துநின்று ஒளிக்கேற்றவாறு பாவையைச் சுருங்கவும் விரியவும் செய்கின்றது. கட்குழம்பிற்குப் பின்புறத்தே, கட்புலப்படாம் (Retina) ஒளிர்கின்றது. அது பத்துப்புரைகளாக விளங்குகிறது. நரம்புநார்ப் புரையும், கருவுளிக்குழூநிறை புரையுமாகப் பலபுரைகள் பின்னே நிறைந்திருக்கின்றன. கோல்கள் (Rods) என்னும் நரப்புறுப்புக்கள் நூல் நூற்கும் கதிர் போன்றுள்ளன. சிறு கோல்கள் போல் நீண்டிருத்தலின் இவற்றைக் கோல்கள் என்றனர். குமிழ்கள் பருத்துக் குறியனவாய்ப் பின்புறத்தே குவிந்து முடிந்து விளங்குகின்றன. நுனி முனைக்குமிழ்போல விளங்குதலின் குமிழ்கள் என்னப் பெயரிட்டு வழங்கினர். இதற்கும் பின்னே, நிறப்புரை ஒன்று இருக்கின்றது. தப்பித்தவறி உள்புகும் ஒளியைப் பரவவிடாது இப்புரை விழுங்கிவிடுகின்றது. கட்புலப் படாத்தின் (Retina) நடுவிடத்தே குமிழ்கள் நிறைந்திருக்கின்றன. சிறிது முன்புறமாகச் செல்லச்செல்ல, ஒவ்வொரு குமிழைச் சுற்றியும்கோல்கள் சிறிதுசிறிதாகப் பல்கிக்கொண்டே வருகின்றன. கட்படாத்தின் விளிம்பருகு வந்தபோது கோல்களே நிறைந்திருக்கின்றன.

கண்ணரம்பு, கண்ணின் பின்வழியாக வந்து பரவுகிறது. கண்ணரம்பு கண்ணுள்ளே புகுமிடத்தில் கட்புலப்படாம் சிறிதுமில்லை. ஆதலின், அதனைக் குருட்டிடம் (Blind Spot) என்பர்.

கட்புலப் படாத்திலே யுள்ள நடுவிடம், பாவையின் நடுவிடத்திற்கும் கண்மணியின் நடுவிடத்திற்கும் நேரே அமைந்துள்ளது. அவ்விடம் மஞ்சள்நிறமாக இருக்கின்றது. இது சிறிதுஉட்குழிந்தும் விளங்குகின்றது. அங்குத்தான் குமிழ்கள் மிகுதியாகச் செறிந்துள்ளன. ஆகவே அதுதான் நாம் விளக்கமாகக் காணும் இடமாம். ஈதே ஒளியிடம் ஆகும். (Fovea)

கட்புலப் படாமானது கண்ணின் உட்புறம் முழுதும் பரவி நிற்கவில்லை. பாவைப்புழை வழியாக ஒளி நுழையுமானால், கண்ணினுள்ளே பின்புறத்தே விழுமன்றி முன்புறத்தே விழாதாதலின், எவ்வளவு தொலைவு ஒளிநிழல் விழுமோ அவ்வளவு தொலைவுதான் கட்புலப் படாம் படர்ந்துள்ளது.

கண்ணரம்பானது இரண்டுகண்களிலும் நுழைகிறது. ஆனால், அந்நரமபு ஒரே இடத்தில் நுழையாது வெவ்வேறு புறமாக நுழைந்துவருகிறது. ஒரு கண்ணில் குருட்டிடம் எந்தப்புறத்தில் இருக்கிறதோ, அந்தப் புறத்தில் மற்றொரு கண்ணில் ஒளியிடம் இருக்கிறது. இதன் பயனாக, எதிரில்உள்ள எந்நிலைப்பொருளையும் விடாதுகாண்கின்றோம். எனது வலப்புறத்தே ஒரு பொருள் விளங்குகிறது. எனது கண்களை ஒரே யளவாக வலதுபுறம் திருப்புகின்றேன். அப்பொருள், ஒரு கண்ணின் குருட்டிடத்திற்கு நேராக இருக்கின்றது. ஆதலால் அக்கண்வழியாக அதனைக்காண முடியாது. ஆனால்,மற்றொருகண்ணின் குருட்டிடம் அதே இடத்தில் இல்லை; அப்பொருளுக்கு நேராக ஒளியிடம் விளங்குவதால் அதனை நன்றாக நாம் காண்கின்றோம்.

இவ்வாறு திரும்பிப் பார்ப்பதாலன்றோ கட்புலன் எழுகின்றது. ஆதலின் கண்ணியக்கத்தையும் நாம் அறிதல் வேண்டும். ஆறு தசைகள், கண்ணை இறுகப் பிடித்து இயக்குகின்றன. இவை இவ்விரண்டாக இயைந்து தொழிற்படுகின்றன. வலப்புறமும் இடப்புறமுமாகக் கண்ணை இயக்குவன, மூக்கிற்கருகாக உள்ள உட்புறத்தசையும், கட்கடையில் உள்ள வெளிப்புறத் தசையுமேதான். கண்ணை மேலும் கீழுமாக இயக்குவன மேலும் கீழுமாக விளங்கும் மேற்புற நேர்த்தசையும் கீழ்ப்புற நேர்த்தசையுமே யாம். இவை நேராகச் செல்கின்றன. அவ்வாறன்றிக் குறுக்காகச் செல்லும் வேறிரண்டு தசைகள் மேலும் கீழுமாக உள்ளன. பிற தசைகள் இயங்கும்போது கண்ணசையும் அன்றோ! அவ்வாறு அசையும்போது, கண்ணானது அளவுகடந்து தலைகீழாகப் புரளாதபடி இந்தக் கீழ்ப்புறக் குறுக்குத் தசையும் மேற்புறக் குறுக்குத்தசையும் தடுத்து இறுகப்பிடித்துக்கொண்டு கண்ணை அளவோடு திரும்பச்செய்கின்றன.

அருகில் உள்ள பொருள்களைப் பார்க்கும்போது நமது கண்மணி பருத்திருக்கின்றது. அப்போது அருகுள்ள பொருள்கள் விளக்கமாகக் காணப்படுகின்றன. அந்த நிலையிலேயே தொலைவிலுள்ள பொருளைப் பார்க்கும்பொழுது,கண்மணி பருத்தேயிருக்குமானால் பொருளின் காட்சியோ கூடுவதில்லை. கூடினாலும் பொருள்கள் தெளிவின்றிக் கலங்கிக் கிடக்கின்றன. ஆதலினால் உடனே மணித்தசை தளர்கின்றது. கண்மணியும் தட்டையாகிறது. பொருளும் தெளிவாக விளங்குகிறது. உடனே, அருகிலுள்ள பொருளைக் காணவேண்டுமானால் நமது மணித்தசைகள் இறுகுவதால் கண்மணியும் பருக்கின்றது. இச்செயல்கள் தாமாகவே எழுகின்றன. இவையனைத்தையும் மணித்தசை மடக்குக்கள் என்பர்.

வெயிலில் நின்றுகொண்டு ஓரழகிய ஓவியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இவ்வாறு ஒளிமிகுந்திருக்கையில், வேண்டிய அளவிற்குமேலும் ஒளியானது கண்ணினுள்ளே புகுவதால் அதனைத் தடுப்பதற்காகப் பாவைப்புழை சிறிதாதல் வேண்டும். பாவைத்தசை யானது (Iris) பேரொளி கண்டபோது இறுகுகின்றது. அதனால் பாவைப்புழை சிறிதாகின்றது. வெயிலிலிருந்து, ஓர்அறைக்குள் அவ்வோவியத்தைக் கொண்டு செல்கிறேன். அறைக்குள்ளே ஒளி குறைந்துள்ளமையால், தளர்கிறது;அதன் பயனாகப் பாவைப் புழை மலர்கிறது. மறுபடியும் ஒளிநிறைந்த இடத்திற் புகுவோமானால், பாவைத்தசை இறுகுகிறது; புழையும கூம்புகிறது, இவையனைத்தும் பாவைத்தசை மடக்குக்களாகும்.

இவ்வாறு உள்தசைகள் இயங்குவதேயன்றிப் புறத்தசைகளும் அசையக் காண்கிறோம். வலமும் இடமும் உள்ள பொருள்களைக் காணவேண்டுமானால் கண்ணுருளை முழுதும் திரும்புதல்வேண்டும். கட்புலப்படாத்தின் நடுவிடத்தில்தான் பொருள்கள்தெளிவாகக் காணப்படுகின்றன எனக் கண்டோம். ஆதலினால், பொருள்களின் எதிர்ஒளி கட்புலப்படாத்தின்

(Retina) நடுவிடத்திலேயன்றி விளிம்பிலே விழுமானால், அவ்வொளி நடுவிடத்தே விழுமாறு கண்ணை அப்பொருளின் வழியே திருப்புகின்றோம், இதனை நடு நிறுத்தல் (Fixation) என வழங்குவர். இது கட்புறத் தசைகளின் மடக்குச் செயலாகும்.

பொதுவாக, நமது இருகண்களிலுமுள்ள மேற்புறத்தசைகள் ஒன்றாகவே செயலுறுகின்றன. அங்ஙனமே, இருகண்களிலும் உள்ள கீழ்ப்புறத் தசைகளும் ஒன்றாகவே தொழில்படுகின்றன. ஆனால் ஒரு கண்ணின் உட்புறத்தசை மற்றொரு கண்ணினுள்ள வெளிப்புறத்தசையோடு ஒருங்கே செயலுறும். அருகிலே உள்ள பொருளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, இருகண்ணின் பாவைமுனைகளும் நெருங்கி நிற்கின்றன. அப்பொருளுக்கு நேரே ஒரு கோடிட்டாற்போலத் தொலைவில் உள்ள வேறொரு பொருளைத் திடீரென உடனே பார்க்கவேண்டுமானால், நெருங்கி நிற்கும் பாவைமுனைகள் அகன்று பிரிகின்றன. மறுபடியும் அப்பொருளுக்கு நேரே ஓர் நேர்க்கோடிடையே கண்ணிற்கு அருகில் உள்ள பொருளைக் காண்போமானால் பாவையின் நடுமுனைகள் (Central point of Pupils) நெருங்குகின்றன. முன் கூறிய மடக்குச் செயல்களில் இரண்டு கண்களும் வலமோ இடமோ கீழோ மேலோ ஒன்றாக இயங்குவதைக் கண்டோம். பாவைகள் நெருங்கும் போதும் அகலும்போதும் ஒரு கண் வலமாக இயங்கினால், மற்றொருகண் இடமாக இயங்குகின்றது. இவ்வாறு இரண்டு கண்களையும் வெவ்வேறே இயக்கி, ஒளியை ஒருமுகப்படுத்துவதால் இதனை இருநிலை ஒளி ஒருக்கம் (Binocular focusing) எனலாம். முன்கூறிய இயக்கங்களோ ஒருநிலை ஒருக்கம் ஆகும்.

ஞானமொழிகள்.

[15-வது பக்கத் தொடர்ச்சி]

அன்பினாலன்றோ பெற்றோர் மக்களுக்கு மருந்தூட்டுவாராயினர் அதுபோல ஆணவமலமாகிய சன்னிநோயினாற் பீடிக்கப்பட்ட உயிருக்கு அது தீர்க்கும் மருந்தாகிய வினைப்பயனை ஊட்டுங்கால் அதுதான் தீய வினைப்பயனாகிய கைப்பு மருந்தாயின் அதனை உண்ண மனங் கொள்ளாதவுயிர் வேண்டாவென்று வைதும் ஏசியும் குறையிரந்தும் விலக்கினாலும், அருட்டாயாகிய அம்மையும் அப்பனும் மடியிற்கிடத்திக் கைகாலை நெருக்கி அமுக்கிப்பிடித்து ஊட்டியே தீர்ப்பர். தீவினைப் பயனாகிய கைப்பு மருந்தை உண்ணுங்கால் திருவருள் அன்னையின் மடியிலிருந்து உண்கின்றோம். ஈதெண்ணி அமைவுற்றவனே அறிந்தவன்.

அன்பனே கேள்!

ஆர்கலி யுலகில் கருக்கொளல் துன்பம்
அன்னை யகட்டினையிரு திங்கள்
மன்னி யிருத்தல் வான்பெருந் துன்பம்
அகடுவிட் டிறங்குத லம்மவோ துன்பம்
பசியினாற் றுன்பம் பிணியினாற் றுன்பம்
இளமையிற் றுன்பம் வறுமையிற் றுன்பம்
செல்வத்திற் றுன்பம் கல்வியிற் றுன்பம்
மாதரிற் றுன்பம் வாழ்வினிற் றுன்பம்
எய்தா வொருபொரு ளெய்துதல் துன்பம்
எய்துதற் கருந்தவ மிருத்தலுந் துன்பம்
இருந்து பெற்றுழி யிழத்தலோ துன்பம்
இழந்தபி னெண்ணி யிரங்குதல் துன்பம்
இருத்தல் துன்பம் இறத்தல் துன்பம்
இறந்ததன் மேலும் துன்பமே யென்றால்
இன்பமிவ் வுலகி லிம்மியு மிலையால்
இப்பெருந் துன்பத் தேது யாதெனின்
மைப்புரை கருமல மாமென வுரைத்தார்
ஆங்கது விருப்பு வெறுப்பினை யளித்து
மூல கன்மமாய் முளைத் தெழுதலின்
அவாவென வொன்றுவந் தரும்பு மாங்கது
தவாப்பிறப் பீனும் வித்தாய்ச் சார்தலின்
துன்பின் காரண மவாவெனப் படுமே;
"ஆசையறு மின்கள் ஆசையறு மின்கள்
"ஈசனோ டாயினு மாசையறுமின்கள்
"ஆசைப் படப்பட வாய்வருந் துன்பங்கள்
"ஆசை விடவிட வானந் தமா"மென
மூலன் தேர்ந்து மொழிந்தது மிதுவே; அதனால்
இன்பத்திற்கேது அவா வில்லாமையே.

ஆதலின் உனக்கு அழியாத இன்பம் வேண்டுமாயின் ஆசையை யகற்று:—

ஆறுமுகப்பெருமானின் ஒரு திருமுகம் உலகுக்கு ஒளிகொடுக்கும். ஒருமுகம் அன்பர்க்கு வரங்கொடுக்கும். ஒரு முகம் கற்றவர் புரியும் பூசையைக் காக்கும். ஒருமுகம் பக்குவமுடையோருக் கருள்கொடுக்கும். ஒருமுகம் தீவினை புரிவோரைத் தண்டிக்கும். ஒரு முகம் இல்லறவாழ்வின் இன்பங் கொடுக்கும். அவர் அங்கையின் ஒளிவேல் அளப்பிலா ஞானம். தெய்வநாயகி அளப்பிலா ஆற்றல்; வள்ளிநாயகி அளப்பிலாக் கருணை. மாமயில் வாகனம் மறைத்தல் தொழில் புரிவன்மை. கோழி வெல்கொடி நாத தத்துவம். திருவடிகள் பேரின்பம். கோழிக்கொடியிலே படைத்தல்; பன்னிரு தோளிலே காத்தல்; வெற்றி வேலிலே அழித்தல்; வீரமயிலிலே மறைத்தல்; விரைமலர்த்தாளிலே அருளல்; ஆதலின், முருகனே மூவருமாவன். மூவர்க்கு முதல்வனுமாவன்; முடிவுமாவன் முதலுமாவன். அவன் திருவடிகளை வணங்கு; வாழ்வாய்.

செந்தமிழ் முருகா!

உலகம் பிறப்பு இருப்பு இறப்பு என்னும் முத்தொழிற் படுத்துபவன் நீயே. அயனைக் குட்டிச் சிறைபுகுத்தினாய். திருமாலை அச்சம் போக்கிக் காத்தாய். அரசனுக்கு மறைமொழி பகர்ந்தாய். ஆதலின் நீயே மூவர்க்கு முதல்வன். ஆதி நீ. முடிவும் நீ. பழைமை நீ. புதுமை நீ. முதுமை நீ. இளமை நீ. நீயே பகவன். உனக்கு ஒப்பானவன் நீயே. நீயே வாலறிவன். நீயே இறைவன். நீயே எண் குணத்தோன். நீயே அறக்கடல். நீயே அருட்கடல். சுத்தமாயையவரைக்கும் உள்ளவற்றைச் சங்கரிக்கும் முதல்வன் நீயே! நான் அடிமை. உன்னருளாலே உன்னை வணங்குகின்றேன். என்ன பயனைக் கருதி வணங்குவிக்கிறாயோ அப்பயனை அருள். ஆதிக்காதியாய் முடிவுக்கு முடிவாயுள்ள உனது அடங்காப் பெருமை வாழ்க.

முருகா! குடம் காரியம்; குயவனாகிய கருத்தாவை உடைத்து, அதுபோல உலகு காரியம். அது உன்னைக் கருத்தாவாக வுடைத்து. குயவன் மண்ணினாற் குடத்தை வனைகின்றான், நீ மாயையினால் உலகத்தை உண்டுபண்ணுகின்றாய். குயவனுக்குத் திகிரி துணை, உனக்கு உன் அருள் துணை. ஆனால் நீ குயவனல்லன். குயவன் ஊதியத்தின் பொருட்டுத் தொழில்புரிபவன். நீ இரக்கத்தின் பொருட்டுத் தொழில் புரிகின்றாய். உனது அருள் வாழி.

க. வேலுப்பிள்ளை.

தனிப்பாடல்கள்

நவாலி. க. சோமசுந்தரம் பிள்ளை.

நாமகள்.

தாயும்நீ நாவினிலே தங்கியினிக் குந்தமிழ்ப்பா
ஈயும் பிராட்டியுநீ யென்வினையு—நோயும்
மிடிவருத்த மும்போக்கு மெல்லியலும் நீயே
குடிதழைக்கக் காப்பாளும் நீ.

மூவேந்தர் காக்க முடிமன்னர் ஏவல்செயப்
பாவேந்தர் கீர்த்திப் பரப்பிசைக்கக்—காவேய்ந்த
கூடற் பழம்பதியை யாண்ட குலக்கொடியே
பாடல் நிறைந்த பசுங்கிளியே—நாடரிய
பைங்காற் செழும்புறவே பண்ணோது பூங்குயிலே
செங்கால்வெண் தூவிச் சிறையனமே—சங்கமலி
பாவையே பூவையே பைங்கரும்பே யின்னமுதே
நாவையே விட்டகலா நல்விளக்கே—காவையே
நீங்காத மஞ்ஞையே நித்திலமே எத்திசையும்
தேங்கா தொளியுமிழுஞ் செம்பொன்னே—ஈங்கென்னை
இப்பிறப்பிற் சேர்ந்தே இயற்றமிழ்ப்பாச் சொல்வதுபோல்
எப்பிறப்புஞ் சேர்ந்தே இசை.

உண்ணாத சுவைத்தேனா யுள்ளத்தே யூறி
உன்னவுன்னத் தித்தித்துத் தித்தித்துள் நிரம்பி
எண்ணருஞ் செவிவாயாய்க் கேள்விவழி யிறங்கி
இருமென்ன வொழுகியுயி ரின்னறிவை நனைத்தே
தண்ணருந் தனியமுத சஞ்சீவி யாகித்
தங்குமறி யாமையெனுஞ் சங்கிநோய் தீர்க்கும்
பண்ணரும் பழந்தெய்வத் தமிழ்மொழியை யருளும்
பாவையிரு சேவடிகள் பணிந்து பரவுதுமே.

நாவினுக்குச் சுவையமுதே நல்லுயிர்க்குத் துணையே
நயனத்துக் கருமணியே மணியாடு பாவாய்
பாவினுக்குச் சொல்லாகிப் பொருளாகிப் பொருளின்
பயனாகி நிற்கின்ற பழமதுரத் தேனே
காவினுக்குள் நறுமணமே கற்பகப்பூங் கொம்பே
கனிந்துகனிந் துள்ளூறித் தித்தித்துத் தெவிட்டா
தாவிதளிர்த்திட நனைக்குஞ் சஞ்சீவி மருந்தே
அருந்தமி ழாரணங்கே யுன்னருள்தருவாயமர்ந்தே.

நீட்டுங்கலைத் தமிழ்த் தெய்வமே! ஏழையேன்-
சிந்தை தனி லொளிர் விளக்கே,
தெள்ளமுதமே யமுதினூறிவரு
தேறலே சிந்தாமணிக் குவியலே
பாட்டுக்கு நனியுருகு பாவையே
பூவையே பரதநட கலவ மயிலே
பாவலர்கள் நாவினிசை கூவு குயிலே
மழலை பயிலுங் கலைக் கிள்ளையே.

நாட்டுக்கு ளொன்று மறியா வெனையு
மியலறியு நற்புலவ னென்ன வென்னை
நாட்டி நின்றே கவிதை பாடியுங்
கேட்டும் நயந்திடும் வெள்ளையனமே
எட்டிற் றவழ்ந்து நெருப்பிற்
குளித்துமுன் என்பிற்கு முயிர்வழங்கும்
இனிய சஞ்சீவியே யுயிரினுக் குயிரே
யுன்னிணை யடிகள் சரணெனக்கே.

அன்னையாய் நாவின் மேவி யமர்ந்தினித் தமுத நல்கி
முன்னிய துணைவி யாகி மூதறி வுணர்த்து மாற்றால்
மன்னிய குருவு மாகி வழிபடு தெய்வ மான
மின்னிய லிடையாள்வாணி மென்மல ரடிகள்போற்றி.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[13-வது பக்கத் தொடர்ச்சி]

கண்ணிரண்டு மொன்றையே காணல் வேண்டுமோ.

நரைத்த குஞ்சியன் திரைத்த மேனியன் நடுங்கிய யாக்கையொடு குரலுமுடையனுத் தயரதன், முனிவரர்வான்மீகி வகுத்தவழி நுவன்ற வாக்கியங்களில், புல்லியவென்று சொல்லற்குரியவைகளைக் கம்பர் புறக்கணித்தாரேனும், செவ்விமாற்றினால் சிறக்கநிற்பதைச் சிந்தையுட்கொண்டு, ஒன்றிரண்டு கையாள்வாராயினர். துனியுற்று துயரக்கோலம் பூண்டுநின்ற தன் தேவியைத் தேற்றுவான்வேண்டி "உனக்கு என்ன பயம் வந்தது சொல்வாய்; சூரியன் பனித்துளிகளை அகற்றுவதுபோல, அதை ஒரு நொடியில் அகற்றிவைக்கின்றேன்" எனப் பகர்ந்த இம்மாற்றம் பெருமையினும் முதுமையின்சிதைவே மிகவுடைத்து. கைகேசியின் மனக்கோள்களுக்கு இணங்க, வளர்கின்ற தலையை வாங்குவானும், வாங்க நின்ற தலையைச் செருகுவானும். வறியோனை நிதிக்கிழவன் ஆக்குவானும். செல்வவந்தனை வறிஞனுய் வீழ்த்துவானும். என்னே இது ! அயோத்திநாடுடைய வள்ளல் ஆட்சியெல்லாம் பெண்டாட்டிசொல் ஆட்டமேயோ! இந்தப்படி அவளுக்குத் தான் செய்ய நிற்குமோர் குற்றேவலிற்றுனே பனித்துளி யகற்றும் பரிதியெனத் தன்னை இறுமாந் திசைத்தான்.

வடநூல் முனிவர்தம் வாய்க்கிலக்காகிய ஓர் மன்னவன் உள்ளமும் உவமமும் இன்னதாயின் இதனையே கவிவரர் கம்பரது கருத்திற்கிசைந்த கோமுனி கோசிகன் முன்னோரிடத்தில்,

" துனியின்றி யுயிர்செல்லச்
சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப்
பகைவென்று படிகாப்போன் "

என்று அந்த உவமையையே, மால்கொண்ட மனைவியின் துனியைத் துடைக்கப்புகும் வீரமன்றிப் படியினைக் காப்பதாம் வேறோர் பெரியகாரியத்திற் கமைத்துக் கொண்டானெனின், பிரிதொன் றினிப் பகர்தல் வேண்டுமோ.

இது ஒன்றோ! தான் செய்துசெய்து ஈட்டிய புண்ணியத்தால் ஆணைவைத்த புன்மையை என் சொல்வது? புண்ணியத்தில் எண்ணம் வைத்தல் சான்றோர் தகைமையன்று என்னா இக் கலாநிலயத்தின் ஆசிரி

யர் கன்னன்தன் மனநிலையை மதித்து முன்னோர் தலையங்கத்தில் வரைந்துள வாய்மையை மறப்பதுஎளியதன்று. அன்னதே நன்னிலை யெனத்தகு மாதலின், மால் கொண்ட சூளுக்கு ஓர் பணையப்பொருளாகப் புண்ணியத்தை வைக்கப் புகுந்தானென்றால் அன்னதோர் மன்னவன் அதனால் இழிகின்ற தாழ்மையை வான்மீகிமுனிவர் மதித்துணரும் ஆற்றல்தான் இலரோ, மற்று ஓர்ந்திருந்தும் அந்நாள் அவனைத் தாழ்த்தத்தான் கருதினரோ எனத் தெளியாமல் நிற்பாரை யாரும் நிந்திக்கமாட்டார். முதலுரைத்தது போதாதென்றோ பின்னும், கைகேசியின் விருப்பத்தை "நிறைவேற்றி வைப்பதாக நான் இதுவரையிலும் செய்திருக்கும் புண்ணியங்களை யெல்லாம் கொண்டு சபதம் பண்ணுகின்றேன்" என்று மீண்டும் பன்னியதையே பன்னி யப் பழங்கிழவன் வற்புறுத்துவானாயினன்.

புண்ணியத்தால் புகன்ற இச்சூளினைக் கம்பர் தன் காவியத்தினுட் புகுத்திடாது காத்தனர். மேன்மகனாயிருப்போன் ஒருவன் மூப்பினாலும் மோகத்தினாலும் தன்னிலை தளர்ந்து சிறிது தள்ளாடலாமே யன்றித் தலைகீழாய் வழுவித் தொங்கமாட்டான். ஆதலினால் இம் மண்ணரசாட்சியில் தான் சாதிக்கவல்லதை ஒருவாறு நினைந்தனனாய் 'உன்னை யிகழ்ந்தவர் மாள்வர்' என்ற மட்டோடு தன் நாவின்பிழைக்கு எல்லையிட்டுப் புண்ணியத்தையும் போ யுழக்காமல் ஓரளவுவழுநீங்கினான். இப்படிச் சில வான்மீகத்தினின்று கம்பர் எடுப்பதும் விடுப்பதுமாய் அமைகின்ற சிறு சிறு வாக்கியங்களும் சிந்தனையின்றி நேர்ந்தவைகளல்ல. இன்னும் சிறிதுசெல்ல இதன் உண்மை புலப்படும். கூறுவார் கம்பர்:—

"வண்டுளர் தாரவன் வாய்மை கேட்ட மங்கை
கொண்ட நெடுங்கணி னாலி கொங்கை கோப்ப
உண்டு கொலாமரு ளென்க ணுன்க ணொக்கில்
பண்டைய வின்று பரிந்த ளித்தி யென்றாள்"

[வண்டுகள் மலர்த்துகின்ற மாலையை அணிந்த தயரதனுடைய வார்த்தையைக் கேட்ட கைகேசி, மேகம்போன்ற பெரிய கண்களிலிருந்து பொழிந்த நீர்த்துளிகள் தன் முலையின்மேல் முத்துமாலைபோல் சொரிந்தவளாகி, 'ஆயின் உனக்கு என்பால் அன்புளதோ. என்னுடைய கண்களும் உன்னுடைய கண்களும் ஓரிணைக்கண்கள்போல் ஒன்றையே நோக்குமாறு இருவர்மனமும் வேறுபாடின்றி ஒருவழிப் பட்டதாயின், பழையனவற்றை இன்று எனக்குப் பரிவினோடு கொடுத்தருள்' என்றாள்.]

"உன்கண் என்கண் ஒக்கில்" என்னுமத் தொடரால் இச்செய்யுள் நம்மைச்சற்றே இழுத்து நிறுத்திக் கொள்கின்றது. எளிதிற் பொருள்படுவதன்றி உரைகாரரைப் பலவகைகளில் வலித்துழக்குகின்ற கம்பசூத்திரங்களில் இதுவும் ஒன்றுபோலும். என்கண்-என்னிடத்தில், அருள் உண்டுகொல் - கருணை இருக்கின்றதோ; உன்கண்-உன்னிடத்தில், ஒக்கில்-இருந்தால்—பண்டைய இன்று பரிந்தளித்தி, என்னுமிப் பொருளால், கூறியது கூறலாகின்றது. இதற்கு அஞ்சித்தானோ "உண்டு கொலாமருள் உன் உண்மை நோக்கின்" என அவ்வடிக்கு வேறோர் பாடபேதம் எழுந்தது? இப்பாடத்தின் அமைதியை இங்கு ஆராயவேண்டா; மற்று, கவிகளே கவிகளின் இதயத்தை அறிவாராதலின், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய,

"காதன் மனையாளும் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்
கண்ணிரண்டு மொன்றையே காண். [கருன்

என்னும் நன்னெறி வெண்பாவில் தொனிக்கின்ற எதிரொலியைப் பின்பற்றிக் கம்பரது செய்யுளில் வந்துள 'உன்கண் என்கண் ஒக்கில்' என்னும் தொடரின் பொருட்சிறப்பை அரிதிற் காணலாகும். 'வேந்தே, நானும் நீயும் காதல்மனையாளும் காதலனும் ஆகின்றோமாதலின் இருகண்ணும் ஒரு பொருளையே நோக்குதல் வேண்டுமென்னும் உறுப்பமைப்பி னியற்கைக்கிணங்க இனி யான் உரைப்பதற்கிருக்குமென் கருத்திற் கியைந்தபடி ஒழுகுவாய்கொல், அல்லைகொல்' என மன்னனை முன்னறிவுறுத்தித் தான் வேண்டுவதைக் கைகேசி விளம்ப நேர்கின்றாள். இப்படியே ஒரு கவியின் கருத்தை மற்றொரு புலவரின் சொற்களால் தேர்ந்துகொள்ள வேண்டலாவதை இக் கம்பரே முன்னோரிடத்தில் வற்புறுத்தி யிருக்கின்றார். 'பிணிக்கு மருந்து பிறம னணியிழை தன்நோய்க்குத் தானே மருந்து' என்னும் குறளடிகளை யுட்கொண்ட பின்னரே,

தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்பயப்பில்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்குநீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்குகேள்வி
ஆயப்புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னன்

[அன்பிலே அத்தயரதன் எவருக்கும், அவரவர் தாயை ஒப்பான். நன்மை விளைப்பதில் எவருக்கும் அவன் அவரவர் செய்துள தவத்திற்குச் சமானமாவான். எவருக்கும் இவன் நோய் ஒப்பான் எனின், அந்நோயின் மருந்தையும் ஒப்பான். நுண்ணிய விஷயங்களை ஆராயப் புகுகின்ற காலத்து எவரெவர்க்கும் அவரவர் அறிவுபோல் உதவுவான்]

என்னும் செய்யுளின் பொருளைச் செம்பாகமாக அறியவைத்தார். தாயின் அன்பாய், தவத்தின் செல்வமாய், சேயின் நற்கதியாய் யாவர்க்கும் தனித்தனி நின்ற தயரதன் அவ்வவர்க்குரிய இன்பப் பொருளாயும் நின்றநீர்மையை 'நோயொக்கு மென்னின் மருந்தொக்கும்' என்னும் தொடரினின்று பெற்றதில்லையேல் அப்பாட்டுச் சுவைப்பயன் அற்றதாகும். அது முன்னிருந்த ஒரு கவியை கொண்டுக் கம்பரைக் கற்பதற்கோ ருதாரணமாம். மற்று 'உன்கண் என்கண்ணொக்கில்' என்னுமிதுவே, பின்வந்தார் பாசுரத்தால் முன்சென்ற கம்பரைக் கற்கவேண்டிய அவசியத்தைக் காட்டுகின்றது. இனி, 'ஒக்கில்' என்பதற்கு 'இருந்தால்' என்னும் ஓர் இல்பொருளைக் கற்பிக்கவேண்டிய அவசியம் இல்லதுமாகும்.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire,' Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanagaramet its end onthe field of Talikota,in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF, BENOY KUMAR SARKAR, M.A, **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT:

Snap-shots of World movements in Commerce, Economic Legislation Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA, The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England,how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU-PAD-PADASHAHI.

or a Critical Review of the Hindu Empire of Maharashtra by VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR, M A., Ph. D., Dacca.

by V. V. OAK B. A., S. T. C. Pp. 1 to 24X168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ. மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு- ஆ. நா. கன்னையா 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினுவிடை கா. ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. விவிக்ஸ் துரைத்தன விளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது— S. சுப்பிர மணிய ஐயர் 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால் பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன் - S. சீனிவாசையர்.... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition Re 1
21. **The New Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. As. 3.
22. Book II „ As. 4.
23. Book III „ As. 5.
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B.A., L.T, As. 3
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A. L. T. As. 3.
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo, M. A. As. 6.
27. **The Clay Cart** As. 6

V. P. Charges, Extra of the Prices.

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்
எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.
எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ 1-8-0 தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வைத்திய ரத்ன பண்டிட்
டி. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவா மிருதம்.

(இன்ப வாழ்க்கைக்கு ஏற்ற ஔஷதம்)

சென்ற 33ஆண்டுகளாகப் பலராலும் மிகவும்போற்றப்படும் அரிய டானிக் இதுவே. சுத்தமான விலையுயர்ந்த மூலிகைகளினலும், லோக சத்துக்களாலும் கோடிக்கணக்கான இந்தியர்களின் பலஹீனத்தையும் கஷ்டங்களையும் போக்கி இன்பத்தை அளிக்கப் பண்டிட்ஜி அவர்களால் மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட உயர்ந்த மருந்து. பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, அஜீரணம், காதிரைச்சல், மலச்சிக்கல், ஞாபகமின்மை, சோகை, முதலியஎல்லாநோய்களையும்நீக்கித் தேகத்திற்கு வலுவையும், மூளைக்குச்சுறுசுறுப்பையும், முகத்திற்கு அழகையும் கொடுக்கக் கூடியது. எல்லா இடங்களிலும் கிடைக்கும். கியாட்லாக் இனம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3—4—0

தந்தி விலாசம்:— "பண்டிட்"
டெலிபோன் நே:- 2191
தபாற் பெட்டி நே: — 287.

ஆயுர்வேத ஆஸ்ரமம்,
151, கோவிந்தப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.
புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

தபால், பெட்டி, நெ:—156

சமையல் — —
சுகம் — —
வேண்டுமானால்

ருக்மணி குக்கர் வேண்டும்

இது நாடறிந்த விஷயம். அனுபவசாலிகள் தம் செயலைப் பின்பற்றி நீங்களும் ஒரு அடுக்கு வாங்குங்கள்.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய ஏழு அடுக்குகள் ரூ.12, 16, 20, 25, 31, 37, 44.
விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (12) சென்னை.

ராமுலு—12

1.	ஸங்கீத சிந்தாமணி	... ...	3	0
2.	திராவிட கானம்	... ...	3	0
3.	ஸங்கீதசில்லரைக்கோர்வை	... ...	3	0
4.	கீர்த்தன ரத்தினங்கள்	... ...	1	4
5.	சங்கீதத்திருப்புகழ்	... ...	0	8
6.	ராஜேந்திரமோஹனா	... ...	1	0
7.	திகம்பரசாமி லீலைகள்	... ...	5	0
8.	ரமாமணி	... ...	2	0
9.	சரோஜனி	... .	2	0
10.	வசிகரண தந்திரம்	... ...	2	0
11.	Kissing in Practice	....	2	0
12.	Fruits of Married Love	...	0	12

காலண்டர், கேட்லாக் இனம்!
M.S. ராமலு & கம்பெனி, ராயபுரம், மதராஸ்.

ஒட்டக்கூத்தர் பாடிய { தக்கயாகப்பரணி ::
மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் பதிப்பு.
விலை ரூ. 4. கலாநிலயம், புரசைவாக்கம் சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

தமிழ்நாட்டு சோல் ஏஜன்ட்கள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஹுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0)
பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்.

டிப்போ, பம்பாய் கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசிகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன்தூது, நைடதம், நளன்தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32.
மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

இந்தியச் சீர்திருத்தம்

மந்திரியின் அறிக்கை.

ஜனவரி மாதம் 19-ம் தேதியன்று கூடிய வட்ட மேஜை மஹாநாட்டில் இங்கிலாந்தின் பிரதமமந்திரியான ராம்ஸே மாக்டொனல்ட், பிரிட்டிஷார் இந்திய அரசியல் திருத்த விஷயமாய்க் கொண்டுள்ள நோக்கத்தைப் பின்வரும் அறிக்கையின் மூலம் தெளிய வைக்கின்றார். அதன் சுருக்கம் வருமாறு:—

வட்டமேஜை மஹாநாட்டின் நடவடிக்கை இந்தியப் பிரதிநிதிகளுக்குத் திருப்தியை அளித்தாலும், அளிக்காவிட்டாலும், நாங்கள் அவர்களைச் சமஅந்தஸ்துடன் நடத்தி அவர்களது அபிப்பிராயங்களை ஏற்றும் எமது நோக்கங்களை அறிவித்தும் ஒரு சமரஸமான முடிவு உண்டாகும் வழியில் முயன்றுள்ளோம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. எவ்வளவு தூரம் நாங்கள் விட்டுக்கொடுக்க இயலுமோ அவ்வளவு நாங்கள் விட்டுக்கொடுத்துள்ளோம். பிரிட்டிஷார் எந்நாளும் இந்தியாவை அடக்கி ஆளவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஒன்றும் செய்ததில்லை. நாங்கள் இந்தியாவில் கல்வியைப் பரவச்செய்யவில்லையா, அரசியல் ஆசை ஏற்படும்படி செய்யவில்லையா; மிண்டோ மார்லி சீர்திருத்தம் மாண்டேபோர்ட் திருத்த முறையினில் உங்களைச் சேர்க்கவில்லையா. இப்பொழுது சைமன் கமிஷன் நியமித்ததும், இந்தியர் அரசியல் உரிமை வளர்வதற்கே யன்றோ?

மாண்டேகு சீர்திருத்த அறிக்கையில் கூறியுள்ளபடி இந்தியா முற்போகவேண்டிய பாதையைப்பற்றித் தான் சைமன்கமிஷன் முடிவு செய்திருக்கின்றது. அக்கமிஷன் முடிவை நீங்கள் ஏற்றாலும் சரி, ஏற்காது போனாலும் சரி, ஒன்று நிச்சயம். நீங்களும் நாங்களும் இங்குவந்து கூடிச்செய்துள ஒரு முடிவிற்கு அக்கமிஷன் அறிக்கையே காரணம்.

நான் முற்போக்கு உடையவன் என்று நீங்கள் நினைத்தாலும், நினைக்காவிட்டாலும் நான் ஒன்று சொல்லுவேன். நான் எக்காரியம் செய்தாலும் ஒரு சிறந்த கொள்கையைப்பற்றியேதான் தொடர்வேன். ஒரு சமுகத்திற்கும் மற்றொருசமுகத்திற்கும் விரோதம் உண்டாகும்படி செய்பவன் உலக சமாதானத்தில் மனமில்லாதவனாவான். இருநாட்டினரைச் சந்துபடச்சேர்க்க முயல்பவரே சரியான ராஜதந்திரி. ஆகையினால் அக்கொள்கை பற்றியே நான் இக்காரியத்தை ஏற்றுள்ளேன். இந்தியாவும் சமாதான நோக்கத்துடன் துணைபுரியுமேல் இந்தியாவின் முன்னேற்றம் வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும்

இப்பொழுது இந்தியாவில் வகுப்பு வாதம் இருந்து வருகிறது. வகுப்புப் பாதுகாப்பு முறை நல்ல முறையன்றாயினும், சில காலம்வரை சில வகுப்பினரின் முன்னேற்றத்தை உத்தேசித்தும், வகுப்புவாதம் அடங்கும் பொருட்டும் வகுப்புப் காப்பு முறை இருக்கவேண்டியதென்றே தோன்றுகின்றது.

இந்தியாவில் தற்காலம் இருக்கும் வகுப்பு நிலையில் மாறுதல் ஏற்பட்டதும், வகுப்புப் பாதுகாப்புமுறை தேவையில்லை. இந்தியருக்கு ராணுவத்தில் அதிக இடம்கிடைக்கவும், இந்தியர் நிர்வாகவிஷயத்தில் அதிகச் செல்வாக்கைப்பெறவும் போதிய அவகாசம் அளிக்கப்படும். இனி அரசாங்கப்பிடரேஷன் அமைப்பு விஷயமாய் ஒரு முடிவு செய்யவேண்டும். அதில் மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கம் இரண்டிற்குமுள்ள தொடர்பும், அதிகாரமும் முற்போக்கான வழியில் அமைக்கப்படவேண்டும். சமஸ்தானத்திற்கும் இந்தியஅரசியலுக்கும் உள்ள சம்பந்தம் நிர்ணயிக்கப்படவேண்டும். இவ் விஷயமாயும் நாம்யோசித்து ஒரு முடிவு செய்துள்ளோம். அம்முடிவின், துணைகொண்டு ஒரு திட்டம் செய்யப்படும்.

இந்திய அரசியற்கைதிகளை விட்டுவிட வேண்டுமென்று டாக்டர் தெஜ்பகதூர் சாப்ரு வற்புறுத்தினார்கள். அவர்கள் கூறியது என் மனதிற்குப்பொருந்தியதாகவே யிருக்கின்றது. இந்தியாவும் இங்கிலாந்தும் இதுமுதல் ஒரு புதிய நட்புடன் வாழவேண்டும் என்பதே எனது விருப்பம். டாக்டர் சாப்ரு கூறியபடி இந்தியா செய்யுமானால் நாங்களும் அவர்கள் கூறியதை ஏற்கிறோம்.

மாகாணங்களில் இந்தியருக்குப் பூர்ணமான பொறுப்பு ஏற்படும். மத்திய அரசாங்கத்தினிடமிருக்கும் சில பொறுப்புகளும் மாகாண சம்பந்தப்பட்ட வகையில் மாகாணத்தின் கையில் விடப்பட வேண்டுமென்பதை எனது சகாக்களும் ஏற்றுள்ளனர். இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் உள்ள தொடர்பில் ஒரு புதிய சகாப்தம் ஏற்படும்படி இரு நாட்டாரும் முயலவேண்டும். பிரிட்டிஷார் இந்தியா விஷயத்தில் நல்ல எண்ண முடையவர்களாகவே யிருக்கின்றனர் என்பதை முடிவாகத் தெரிவிக்கின்றேன். இந்தியாவின் அரசியல் முன்னேற்றம் ஏகாதிபத்திய நட்பும் வளரும்படி இந்தியர் முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

***

மதிப்புரை :— திருவல்லிக் கேணியிலிருக்கும் ஸ்ரீமான். K. S. முத்துஸாமிஐயர் அவர்கள் எழுதிய வாக்குரிமை விளக்கம் என்னும் ஒரு நூல் மதிப்புரைக்கென வரலாயிற்று. இப்புத்தகம் 32 பக்கங்களைக் கொண்டது. இதில் இந்தியாவின் வறுமை அகலவும், ஜனங்களின் செல்வநிலை, அரசியல் செல்வாக்கு, கைத்தொழில் வியாபாரங்கள் பெருகவும், வாக்குரிமையை நேர்மையோடு செலுத்தவேண்டியது இன்றியமையாததென்றும், இவ்விஷயத்தில் திருத்தமான முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்றும் வற்புறுத்த முயன்றிருக்கின்றார். அதற்குரிய வழியும் காட்டப்பட்டிருக்கின்றது. விலை அணா 2. வேண்டுவோர், திருவல்லிக்கேணி, 100 நெ. பெரிய தெருவிலிருக்கும் ஸ்ரீமான் K. S. முத்துசாமி ஐயரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

***

டையரி வரவு:—சென்னை பந்தர் தெருவிலிருக்கும் யுனைடட் கன்ஸர்ன் என்னும் கம்பனி நமக்கு ஒரு 1931 வருட டையரி அனுப்புவித்தனர். இதில் பிரமோதூத பிரஜோத்பத்தி வருடப் பஞ்சாங்கமும் வியாபாரிகளுக்குரிய விஷயங்களும் தினசரிக் குறிப்பிற்குரிய முறையும் அமைந்திருக்கின்றன.

சென்னை பி. ஜி பால் கம்பனியாரிடமிருந்து ஒரு 1931 வருட டையரி வரப்பெற்றோம். அது சிற்றடக்கமானதும், பார்ப்பதற்கு அழகானதுமான டையரி. வியாபாரிகளுக்குரிய விஷயங்கள் அடங்கியது. ஞாபகக் குறிப்பு வசதியுமுடையது.

புதிய பதிப்பு! வெளிவந்து விட்டது !!

ஸ்ரீ புகழேந்திப் புலவர் அருளிச்செய்த

நளவெண்பா மூலமும்

(தெளிபொருள் விளக்க—அகல உரையும்)

(செய்யுள் தலைப்பு, பதவுரை, கருத்துரை, விரிவுரை, விசேஷஇலக்கண இலக்கியக் குறிப்புகளுடன் கூடியது.)

இந் "நளவெண்பா" வின் உரை அமைப்பு மாணவர்க்கும் மற்றவர்க்குந் தெற்றென விளங்கும். 413-ம் செய்யுள் "நல்லரசனாகிய நளனை நோக்கிப் புல்லரசனாகிய புட்கரன் 'க்ஷேமந்தானா' நன்று வினவினானெனல்" என்பது போன்ற தலைப்புகள் ஒவ்வொரு செய்யுட்கும் வரையப்பட்டுள்ளது. கருத்துரையும் அதனடியில், அதனதன் சூத்திரமும் இலக்கணக் குறிப்பும் உள.

முழு காலிகோ பையிண்டு விலை ரூ. **2**

V. S. T. சாமி கம்பெனி,

புரசைபாக்கம் ஐரோட், வேப்பேரி, சென்னை.

இனம்! இனம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,

1/94, சைனா பஜார், மதராஸ்.

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

Head Office:-**9, Old Court House St., Calcutta**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management for the benefit of Indians.

(2) The Company has never contested a claim on a technicality.

(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms,

Apply to:— R. G. DAS & CO., *Managers.*

T. ANANTACHARI, B.A.,

Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,

Madras Branch, Loane Square,

Broadway, Madras.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4 ஷை சாதா ரகம் பொடி வீசை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த

R.S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாட்டில் 1-க்குஅணா 4. டஜன் ரூபா $2\frac{1}{4}$ ஷை ஒரு சேர்டின் ரூபா $1\frac{3}{4}$ வி பி, ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்"

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3

ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)